# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 04-05-2021 செவ்வாய் கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சியில் வரி வசூல் மையத்தில் இயங்கிக் கொண்டிருந்த TVS Dotmatric Printer பழுதடைந்துள்ளது என்று கணினி உதவி திட்ட அமைப்பாளரின் அறிவுரையின்படி தொழில் நுட்ப வல்லுநர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் Printer பழுது நீக்கம் செய்ய இயலாது என்று கூறியுள்ளதால் பொறியாளர் மற்றும் ஆணையர் அறிவுரைபடி புதிதாக 2 TVS Dotmatric Printer வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.23,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கும்.
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3659**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு உட்பட்ட நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான மேம்பாலத்தின் அடியில் அமைந்துள்ள சாலையில் பஜாஜ் ஸ்பேர்பார்ஸ் கடைக்கு அருகாமையில் நகராட்சிக்கு சொந்தமான Value Pit சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் தண்ணீர் வினியோகம் ஒரு பகுதியில் இருந்து மற்ற பகுதிக்கு மாற்றும் பொழுது சிக்கல் ஏற்படுகிறது. மேலும் Value pit நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு புதிய Value pit அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.38,000/-க்கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தேர்தல் நன்நடத்தை விதிமுறைகள் அமுலில் இருப்பதால் பிரிவு 15-ன்கீழ் வேலையினை செய்திடவும் குடிநீர் நிதியின்கீழ் செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3660**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சியிலுள்ள MCC-ல் நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை Shredding Machine மூலமாக மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக மாற்ற பயன்படுத்தப்படும் இயந்திரத்தில் Bearing Main soft மற்றும் Cutting Blade coating ban மற்றும் Pulling Key ஆகிய பகுதிகள் பழுதடைந்து சரிவர இயங்காத காரணத்தினால் குப்பை பிரித்தெடுக்கப்படும் முறை பாதிக்கப்பட்டுள்ளதால் சுகாதார அலுவலரின் நேரடி புகாரின் அடிப்படையில் இடத்தை பார்வையிட்டு அறிவுரையின்படி பழுதடைந்த இயந்திரத்தை சரி செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.30,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தற்போது தேர்தல் நன்நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளதால் மேற்படி வேலையின் அவசியத்தை கருத்தில் கொண்டு பிரிவு 15-ன்கீழ் வேலை செய்திடவும் தொகையினை குடிநீர் நிதியின்கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3661**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சியின் எல்கைக்குட்பட்ட நகராட்சியின் தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்தில் மார்த்தாண்டம் OHT-க்கு நீரேற்றும் குழாயில் (4” C.I.100M) பொருத்தப்பட்டுள்ள சுலீஸ் வால்வு 2 எண்ணம் மற்றும் Non-return Value -2 எண்ணம் சரியான முறையில் இயங்கததால் மின்தடை ஏற்படும் நேரங்களில் Pumping Main Pipe-ல் உள்ள தண்ணீர் திரும்பவும் Clear Water Sump-னுள் வருகிறது. மீண்டும் இயக்கும் இந்த Pumping Main fill ஆகி OHT-யில் தண்ணீர் ஏறுவதற்கு ஒருமணி நேரத்திற்கு மேல் ஆகிறது. இதனால் குடிநீர் வினியோகம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. ஆகவே இந்த 100mm சுலீஸ் வால்வு 2 எண்ணம் மற்றும் Non-return Value -2 எண்ணம் பழையதை மாற்றி பெருத்திட மதிப்பீடு ரூ.21,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும், தற்போது பணியாளர் அவசரத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை பிரிவு 15-ன்கீழ் உடனடியாக வேலை செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் தற்போது தேர்தல் நன்நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் தனி அலுவலர்

அனுமதி பெற்று பணியினை செய்தமைக்கும் பட்டியல் தொகையை குடிநீர் நிதியில் செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3662**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் ஜெனரேட்டர்கள் 45KVA கிர்லோஸ்கர் ஜென்செட்டு-1, 40KVA கிர்லோஸ்கர் ஜென்செட் -3 மற்றும் நகராட்சி அலுவலகத்திலுள்ள 15KVA கிர்லோஸ்கர்-1 மற்றும் மார்த்தாண்டம் மீன்சந்தை ஜெனரேட்டர்களுக்கு மின்தடை ஏற்படும் நேரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 5-2-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) R.J. Power, Marthandam மதிப்பீட்டை விட 36.96% Less Rs.163940/-
2) Annai Generators, Nagercoil மதிப்பீட்டை விட 0.00% Less Rs.260050/-
3) Mr.P. Jayachandran,Salayanvilai மதிப்பீட்டை விட 40.05% Less Rs.155900/-
4) Mr.P. Jayaprakash, Salayanvilai மதிப்பீட்டை விட 39.67% Less Rs.156900/-

மேற்படி பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.3-ல் ஜெயசந்திரன் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டை விட 40.05% குறைவாக கொடுத்துள்ளார். கூடுதல் வைப்புத் தொகை (295000x 40.05%) =118148/- ஐ செலுத்திய பின்பு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3663**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சியில் 2015 மற்றும் 2017-ம் ஆண்டில் வாங்கப்பட்ட 5KVA மற்றும் 6KVA Battery மின் இணைப்பு துண்டிப்பின்போது Off ஆகிறது. இதனை ஆய்வு செய்தபோது Battery-யின் ஆயுள்காலம் முடிவடைந்துள்ளது. மின் இணைப்பு துண்டிக்கப்படும் நேரத்தில் Engineering Section, Revenue Section, Town Planning Section பிரிவுகள் பணிகளில் தடை ஏற்படுகிறது. ஆகையால் 16 Nos. 12V.100 Amps Online Battery Quata புதிதாக வாங்கி பொருத்த உத்தேச மதிப்பீடு

ரூ.2,53,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு உடனடியாக வேலை செய்ய வேண்டியுள்ளதால் தற்போது தேர்தல் நன்நடைத்தை விதிகள் அமுலில் இருப்பதால் பணியின் அவசரத்தை கருத்தில் கொண்டு வேலையினை உடனடியாக பிரிவு 15-ன்கீழ் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பிரிவு 15-ன்கீழ் வேலை செய்தமைக்கும், பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3664**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான Computer மற்றும் Printer-கள் 2021-2022-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட உதவி திட்ட கணனி அமைப்பாளரின் குறிப்பின்படி Computer 24 எண்ணம், TVS Domatric Printers -2 Nos., HP Laser Jet Printer (1020 Model) -2 Nos., Laser Printer 2035 model-1 No., Laser Printer 1108 Model 2 Nos., Laser Jet MFP M227 sdn Model-6 Nos, Laser Jet Pro M403 dn 3 Nos., HP Scan Jet 1 No.-க்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ரூ.97,000/-க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3665**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 கொடுங்குளம் வடக்குத்தெரு சாலையிலிருந்து பெத்தேகோஸ்த் சபை அருகில் செல்லும் குறுக்கு சாலையானது நகராட்சி பராமரிப்பில் உள்ளது. மேற்படி சாலையில் தெருவிளக்கு இல்லாத காரணத்தினால் பொது மக்களின் நலன் கருதி இரண்டு தெருவிளக்கு (மின் இணைப்பு 181-004-1132-க்கு) ரூ.9,180/- செலுத்த கேட்பு நோட்டீஸ் வரப்பெற்றுள்ளது. ஆகவே மேற்படி தொகையினை மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பொதுமக்களின் நலன் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மார்த்தாண்டம் மின்வாரியத்திற்கு தொகை செலுத்தியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3666**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சி சப்பாத்து Pump House-லிருந்து ஆர்.சி.தெரு திருத்துவபுரம் உயர்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு தாமிரபரணி ஆற்று சப்பாத்து பாலம் வழியாக 100mm GI Pipe குழாய் ஆற்றின் தண்ணீர் அப்பகுதி வழியாக செல்கிறது. இந்த மெயின் குழாயில் அரிப்பு ஏற்பட்டு பல இடங்களில் நீர் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாகிறது. சில சமயங்களில் உயர்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு நீர் ஏற்ற முடியாத நிலை ஏற்பட்டு பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வினியோகம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகையால் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே போடப்பட்டுள்ள உடைந்த 100mm GI Pipe-யை மாற்றி புதியதாக 100mm GI Pipe 36 மீட்டருக்கு அமைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.90,000/-க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை குடிநீர் நிதியில் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3667**
**அனுமதிக்கப்படுகிறது. நகராட்சி பிரிவு 1-இன் கீழ் மேற்கொள்ளப்பட்டது**

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட இடைக்குளம் பகுதியிலிருந்து காட்டுவிளை மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் 100mm குடிநீர் குழாயில் பழுது ஏற்பட்டுள்ள காரணத்தினால் இடைக்குளம் பகுதியில் இருந்து காட்டுவிளை OHT Tank-ற்கு குடிநீர் செல்ல இயலாத நிலை உள்ளது. இதனை சரி செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1,66,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தற்போது தேர்தல் நன்னனடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை செய்திடவும் பட்டியல் தொகை குடிநீர் நிதியில் செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3668**
**அனுமதிக்கப்படுகிறது. நகராட்சி பிரிவு 1-இன் கீழ் மேற்கொள்ளப்பட்டது**

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட விளவங்கோடு பள்ளி, எல்.எம்.எஸ்.பள்ளி, நீதிமன்றத்தின் அருகில் உள்ள அரசு பள்ளிகளின் வாக்கு பதிவு மையங்களில் மராமத்து பணிகள் மற்றும் Ramp அமைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.90,000/-ம் ஆகும். மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தற்போது தேர்தல் நன்னடைத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணியினை செய்திடவும் பட்டியல் தொகை வருவாய் நிதியில் செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3669**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சியில் வெட்டுவெந்நியில் பழைய அங்கன்வாடி மையம் இருந்த இடத்தில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்கப்பட்டது. இந்த மையத்தில் 20 மழலை குழந்தைகள் பயின்று வருகிறார்கள். மேற்படி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் மற்றும் ஆசிரியர் கழிவறையில் PVC Door அமைத்தல் மற்றும் புதிதாக Septic Tank அமைத்தல் குடிநீர் வசதி செய்ய HDPE Tank 1000 litres Capasity Tank அமைத்தல் மற்றும் 110mm PVC Pipe (கழிவுநீர் குழாய்) அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3670**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.13</u>**

குழித்துறை நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கழுவன்திட்டை OHT Tank அமைந்துள்ள வளாகத்தினுள் புதிதாக OHT Tank (உயர்நிலை நீர்தேக்க தொட்டி) அமைக்க உள்ளதால் குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் மற்றும் உதவி

செயற்பொறியாளர் நேரடியாக இடத்தை பார்வையிட்டதில் உயர்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள 150mm DI Pipe மற்றும் 100mm DI Pipe மாற்றி அமைக்க தெரிவித்துள்ளதனடிப்படையில் அந்த பகுதியில் புதிதாக 150mm DI Pipe மற்றும் 100mm DI Pipe புதிதாக அமைக்கவும் புதிய Valve Pit அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.7,50,000/-த்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3671**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் TN.75M.8952-க்கு வாகனத்தின் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய ஒட்டுநர் அறிக்கை மற்றும் சுகாதார அலுவலர் அறிக்கையின்படி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி ரூ.6000/-ம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வாகனத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை செய்தமைக்கும் தற்போது தேர்தல் நன்நடத்தை விதி முறைகள் அமுலில் இருப்பதால் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3672**
**அனுமதிக்கப்படுகிறது.**

# <u>குழித்துறை நகர்மன்றத்தின் 28-05-2021 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்</u>

<u>பொருள் எண்.1</u>

2021-2022-ம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதிக்குரிய வரவு செலவு (பட்ஜெட்) மன்றத்தின் பார்வைக்கு.
ந.க.எண்.550/2019/பி1.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3673**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN74Z 4605-ல் மோட்டார் பொருத்தி நகராட்சிக்கு சொந்தமான 21 வார்டுகளுக்கும் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பழுதாகியுள்ளதால் அதனை சரி செய்ய மதிப்பீடு ரூ.19,330/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டில் வேலை செய்திடவும் பிரிவு 15-ன்கீழ் உடனடியாக வேலை செய்து முடித்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள மோட்டாரில் ஏற்பட்டுள்ள பழுதினை பிரிவு 15-ன்கீழ் வேலை செய்திடவும் மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை செய்தமைக்கும் தொகையினை குடிநீர் நிதியில் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3674**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட முனிசாமி வணிகவளாகத்தின் பின்புறம் வெட்டுவெந்நியிலிருந்து தேங்காய்பட்டணம் செல்லும் சாலையின் அருகில் உள்ள மழைநீர் வடிகால் முற்றிலும் பழுதடைந்துள்ளதால் மழைகாலங்களில் ஓடையில் சரியாக தண்ணீர் செல்லாமல் முழுவதுமாக ஆங்காங்கே தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுத்தியுள்ளது. மேலும் தேங்கி நிற்கும் நீரில் தொற்று நோய் பரவவும் ஏதுவாகிறது. ஆகவே பழுதடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.4,50,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை பொது நிதியில் இருந்து செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3675**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீரினை தெளிவுப்படுத்தவும், தொட்டியினை சுத்தம் செய்திடவும், மின்பணியாளரின் அறிக்கையின் அடிப்படையில் கழுவன்திட்டை, காட்டுவிளை மற்றும் திருத்துவபுரம் OHT-க்கு குளோறினேஷன் செய்வதற்கு 1000 கிலோ கிராம் பிளிச்சிங் பவுடர் அவசர அவசியமாக வாங்கி வழங்கிட உத்தேச மதிப்பீடு ரூ.62,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பிரிவு 15-ன்கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, தற்போது மழைக்காலம் ஆகையால் பொதுமக்களின் நலன் கருதி பிரிவு 15-ன்கீழ் பிளீச்சிங் பவுடர் வாங்கி வழங்கிடவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3676**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீரினை தெளிவு செய்திட தேவையான ஆலம் 2500 கிலோ கிராம் வாங்கி

வழங்கிட மின்பணியாளரின் அறிக்கையின் அடிப்படையிலும், பொதுமக்களுக்கு தெளிந்த குடிநீரியினை வினியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் சுத்தமான குடிநீரியினை வினியோகம் செய்தி உத்தேச மதிப்பீடு ரூ.88,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பிரிவு 15-ன்கீழ் அவசர அவசியமாக வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தற்போது மழை அதிகமாக உள்ளதினாலும் தெளிந்த குடிநீர் வினியோகம் செய்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஆலம் வாங்கவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3677**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சியின் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2020-2021-ன்கீழ் உள்ள பணிக்கு 21-05-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.17 காமனாட்டுவிளை கருணாகரன் வீட்டு முன்பிருந்து நகராட்சி கிணறு வரை வடிகால் ஓடை கட்டி மேல் மூடி அமைத்தல் | 2.50 | 1) K.C. சுதர்சன்<br>2) M. ஷாஜி<br>3) A. ஆன்றணி<br>4) R. அனி<br>5) V. வர்கீஸ்<br>6) S. பாபு<br>7) S. கிறிஸ்துராஜ்<br>8) J. பிரிவீஷ் | 8.20%<br>13.98%<br>16.61%<br>7.31%<br>16.65%<br>18.98%<br>12.25%<br>18.80% |

வரப்பெற்ற 8 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்ட குறைந்த மற்றும் மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொண்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3678**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு பெற்ற திரு.T. அமிர்தராஜ் 2016-2017-ம் ஆண்டில் பணி செய்த பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.9,308/- காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கு.
அ.கு.- அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1267/2020/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3679**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் மின் இணைப்புகளை அரசு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பகிர்மான விதிப்படி மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.24.40 லட்சம் மற்றும் ரூ.24.00 லட்சத்திற்கு 21-05-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோர செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்த வகையில் மதுரைமணி என்ற பத்திரிகையில் 10-05-2021-ல் விளம்பரம் செய்த வகைக்கு பில்பட்டியல் ரூ.29,988/- வரப்பெற்றுள்ளது. தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3680**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான இடக்குளம் குடிநீர் திட்ட கிணற்றிலிருந்து காட்டுவிளை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் நீரேற்றம் செய்யும் நீரேற்று குழாயில் 150மீட்டர் நீளத்திற்கு தற்போது பெய்து வரும் கனமழையின் காரணமாக பழுது ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு குடிநீர் சரியாக வினியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே மேற்படி பழுதினை சரி செய்ய வேண்டியுள்ளதால் புதியதாக 100mm GI Pipe பதிப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3681**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது 20-05-2021 முதல் தொடர்ந்து பெய்துவரும் கனமழையின் காரணமாக அட்டகுளம், காமனாட்டுவிளையில் உள்ள மழைநீர் வடிகால் ஒடை சேதமடைந்துள்ளது. அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்கு பெரும் சேதமடைந்துள்ளதால் மேற்படி வடிகால் ஒடையின் அவசர அவசியமாக சரி செய்ய வேண்டியுள்ளதால் மதிப்பீடு ரூ.58,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளதை பிரிவு 15-ன்கீழ் அவசர அவசியமாக வேலை செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்திக்கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை செய்தமைக்கும், தொகையினை வருவாய் நிதியில் செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3682**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Sulice Valuve 2 எண்ணம், Non returen valuve 80mm 2 Nos. 125mm Sulice Valuve 2 Nos., 125mm Non returen valuve 2 Nos. 150mm Sulice Valuve 2 Nos. மற்றும் 150mm Non returen Valuve 2 Nos. ஆகியவை பழுதடைந்துள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்தில் பகிர்மான குழாய் சரியான முறையில் தண்ணீர் கொடுக்க இயலாத நிலை உள்ளது. ஆகவே அதனை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.2,88,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை அவசர அவசியமாக செய்ய வேண்டியுள்ளதால் தற்போது தேர்தல் நன்நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பிரிவு 15-ன்கீழ் உடனடியாக வேலை செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தற்போது தேர்தல் நன்நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் தனி அலுவலர் அனுமதி பெற்று பணியினை செய்தமைக்கும் பட்டியல் தொகை குடிநீர் நிதியில் செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3683**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2021-2022 முதல் மூன்று ஆண்டிற்கு பொது ஏலம் விடவும் மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்கு உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

2021-2022 முதல் 2023-2024 முடிய பொது ஏல நிபந்தனைகள்

| வ. எண் | உரிமங்களின் விபரம் | ஏலப்பொறுப் புத்தொகை ரூபாய் | தேசியம யமாக்கப் பட்ட வங்கி உத்திர வாத சான்று தொகை ரூபாய் | வங்கி உத்திரவாத சான்று கொடுக்க இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | காய்கறி சந்தைக்குள் இருக்கும் ஆடு, கோழி அடிக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000 | 10,000 | 5,000 |
| 2 | மார்த்தாண்டம் மினிபார உந்து நிலையம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் | 25,000 | 50,000 | 25,000 |
| 3 | குழித்துறை மாலை சந்தை மற்றும் குழித்துறை அம்மன்கோயில் பக்கம் உள்ள இடங்களில் பொருட்களை விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 25,000 | 50,000 | 25,000 |
| 4 | வாவுபலிப் பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள கன்று காலிச் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (செவ்வாய் கிழமை மட்டும்) | 1,00,000 | 1,00,000 | 50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மார்த்தாண்டம் லாறிப்பேட்டை கழிப்பறை கட்டணம் வசூல் குத்தகை உரிமம் | 10,000 | - | 10,000 |
| 6 | மார்த்தாண்டம் காய்கறி சந்தைகள் கட்டண கழிப்பறை மற்றும் பி.பி.முனிசாமி வணிகவளாக கட்டிடத்தில் உள்ள கட்டண கழிப்பறை வசூல் செய்யும் குத்தகை உரிமம் | 30,000 | - | - |
| 7 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கம் குத்தகை உரிமம் | 2,00,000 | 1,00,000 | 50,000 |

## கடைகளுக்கான பொது ஏலநிபந்தனைகள்

1) ஏலம் கோரவிருப்பம் உள்ளவர்கள் அந்தந்த இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள வைப்புத்தொகையினை வங்கி வரைவோலை மூலம் (டிமாண்ட் டிராப்ட்) ஏலத்திற்கு முந்தைய வேலை நாள் மாலை 5.00 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் கொடுத்து உரிய அத்தாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.

2) ஏலத்திற்கு முந்தைய நாள் உரிய வரைவோலையாகவோ/ ரொக்கமாகவோ செலுத்தி அத்தாட்சி பெறாதவர்கள் ஏல தினத்தன்று கண்டிப்பாக ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3) பொது ஏலம் விளம்பரம் செய்த நாள் முதல் ஏலத்திற்கு முந்தைய வேலை நாளன்று ஏல நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

4) ஏலம் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே பொறுப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். ஒரு இனத்திற்கு கொடுக்கப்பட்ட வங்கி வரைவோலை. ரொக்கமாக செலுத்தப்பட்ட தொகை வேறு கடைக்கு எக்காரணம் கொண்டும் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5) மேற்கண்ட விபரப்படி பொறுப்பு தொகை செலுத்தியவர் அல்லது அவரது முறையான அதிகாரம் பெற்ற ஒருவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

6) இதற்கு முன்பு ஏலம் எடுத்து உரிமம் தொகையை (தவணைத்தொகை) செலுத்த தவறியவர்கள் அல்லது நிலுவை உள்ளவர்கள் மற்றும் அவரது இரத்தம் சார்ந்த உறவுகள்/ வாரிசுகள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்களும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கபட மாட்டார்கள்.

7) கடைகள் ஒப்படைக்கப்படுவதிலிருந்து மூன்றாவது நிதியாண்டு மார்ச் 31-ம் தேதி வரை மட்டுமே முதலில் ஒப்படைக்கப்படும். பின்னர் உரிய புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி 15% வாடகை உயர்வுடன் மொத்தம் ஒன்பது ஆண்டுகால அளவு வரை உரிமம் புதுப்பித்து வழங்கப்படும்.

8) உரிமம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் அப்போதைய அரசு விதிகளின்படி வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டு தாங்கள் சம்மதிக்கும் நேர்வில் தங்களுக்கு கடை ஒப்படைக்கப்படும். அவ்வாறல்லாத நேர்வில் ஏலம் விடப்படும்.

9) ஏலம் உறுதி செய்யப்பட்டதும் ரூ.20/- மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் தயார் செய்து புகைப்படம் ஒட்டி ஆதார் அட்டை நகல் இணைத்து நோட்டரி வழக்கறிஞர் ஒப்பம் பெற்று மூன்று தினங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10) வாடகையுடன் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் உரிம கட்டணம்/ தொழில்வரி/ சேவைவரி குறித்த காலத்திற்குள் தவறாது செலுத்தப்பட வேண்டும்.

11) கடை உரிமம் பெற்றவர்கள் கடை வாடகையினை அந்தந்த மாதம் 5-ம் தேதிக்குள் தவறாது செலுத்தப்பட வேண்டும்.

12) கடைகளில் அரசால் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் விற்பனை செய்ய கூடாது. மேலும் வேறு பயன்களுக்காகவோ/ உணவகமாகவோ/ குடியிருப்பாகவோ பயன்படுத்த கூடாது.

13) மின் இணைப்பு “ஆணையாளர், குழித்துறை நகராட்சி” என்ற பெயரில் மட்டுமே எடுக்க வேண்டும். மேலும் மின் கட்டணம் நேரிடையாக

மின்வாரியத்தில் செலுத்தப்பட வேண்டும். கூடுதல் மின் கட்டண பொறுப்பு தொகையும் குத்தகைதாரரை சார்ந்தது ஆகும்.

14) மேற்படி கடையின் மின் கட்டணம்/ குடிநீர் கட்டணம் மாதம் செலுத்துவது குத்தகைதாரரை சார்ந்தது ஆகும். தவறிடும் நேர்வில் இணைப்பு துண்டிப்பு செய்யப்படும்.

15) கடை வாடகை செலுத்தும் போது சேவைவரியுடன் செலுத்தப்பட வேண்டும். மேலும் அரசால் அவ்வப்போது அரசால் நிர்ணயம் செய்யப்படும் சேவை வரி செலுத்தப்பட வேண்டும்.

16) மேற்படி கடைகளில் ஆக்கிரமிப்பு மற்றும் வேறு ஏதேனும் மாறுதல் செய்யக்கூடாது. அவ்வாறு கடைகளில் மாறுதல் ஏதேனும் செய்யப்பட்டால் உடனடியாக உரிமம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17) 2021-2022-ம் ஆண்டு நகராட்சி பொது ஏல அறிக்கையில் இருக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுபட்டு நடந்து கொள்ள வேண்டும்.

18) நகராட்சி மற்றும் அரசால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

19) மேற்படி நிபந்தனைகளின்படி நடக்க தவறினால் நகராட்சி பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி தங்களுடைய வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதோடு அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் தங்களை பொறுப்பாக்கப்படும்.

20) மேற்படி கடை உரிமம்தாரர் 2021-2022-ம் ஆண்டு பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு கடைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வரும் பொருட்களுக்கு நகராட்சி ஏல நிபந்தனைகள்படி நுழைவு கட்டணம் செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

21) தொழுநோய் உள்ளவர்களையும் பிற தொற்றுநோய் உள்ளவர்களையும் சந்தைக்குள் அனுமதிக்க கூடாது.

22) பொது மககளின் போக்குவரத்திற்கு வசதியாக பொருட்களை கடைக்குள் ஒழுங்காக வைத்து விற்பனை செய்ய வேண்டும். இதற்கு ஆணையரோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவரோ வழி எந்த முறையில் இருக்க வேண்டுமென்று கூறுகிறாரோ அதையே வழியாக ஏற்க வேண்டும்.

23) கடையினுள் எளிதாக தீ பற்றக்கூடிய பொருட்களை பயன்படுத்த கூடாது.

24) எளிதில் தீ பற்றக்கூடிய பட்டாசுகள் மற்றும் இதர அபாயகரமான பொருட்கள் சேமிக்க/ விற்பனை செய்ய அனுமதி கிடையாது.

25) ஏலம் உறுதி செய்யப்பட்டதும் ஒருவருட வாடகை தொகையினை கூடுதல் வைப்புத் தொகையாகவும், மின் கட்டண வைப்புத் தொகையாக ரூ.20,000/- செலுத்த வேண்டும்.

26) கடைகளை அரசியல் கட்சி/ சங்க அலுவலகங்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாது.

27) கடை உறுதி செய்யப்பட்டு ஆணை வழங்கிய நாள் முதல் கடை வாடகை செலுத்தப்பட வேண்டும்.

28) ஏலத்தில் கலந்து கொள்பவர்களின் எவரெனும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன் உள்ள கேள்விக்கோ அல்லது உச்ச ஒப்பந்தப்புள்ளிக்கோ குத்தகை உரிமையாணையை எடுக்க விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உச்ச கேள்வியின் முழுத்தொகையும் மற்றும் ஏலத்தொகையில் 1/3 பங்கு தொகையை சேர்த்து செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மனுவில் தான் கேட்க விரும்பும் தொகையை தெளிவாக குறிப்பிட்டு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டு வர மனு செய்து கொள்ளலாம். இதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய ஆணையருக்கு பூரண உரிமையுண்டு. ஏலக்கேள்வி உச்சமாக இருந்தால் ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டவர்கள் மட்டும் மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்ய தகுதி பெற்றவர்கள். மேலும் கூடுதல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு விருப்பம் தெரிவித்து மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவரும் நிபந்தனை முதல் மற்றும் அடுத்தடுத்த அழைப்புக்கு மட்டுமே பொருந்தும் இறுதி என குறிப்பிட்ட அழைப்புக்கு இது பொருந்தாது.

<u>அனைத்து இனங்களுக்கும் பொது நிபந்தனைகள்</u>

1) ஏலங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட பொது நிபந்தனைகளுக்கும், 1920-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகள், வழிச்சட்டங்கள், உபவிதிகள் கணக்கு விதிகள் அரசாணைகள் மற்றும் நகர்மன்றம் விதித்துள்ள அல்லது இனிவிதிக்கும் பொதுக்கட்டுபாடுகள் மற்றும் சிறப்புக்கட்டுப்பாடுகள் யாவற்றுக்கும் உட்பட்டவையாகும்.

2) பட்டியலில் கண்டுள்ளபடி குத்தகை உரிம இனங்களுக்கு முறையே நகராட்சி நிர்வாகம் மறிறும் குடிநீர் வழங்குத்துறை (ந.நி.4) அரசாணை (நிலை) எண்.181, நாள் 19-09-2008-ன்படி உரிமம் வழங்கப்படும்.

3) ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் தாங்களே நேரிலோ அல்லது எழுத்து மூலம் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுதி அதிகாரம் அளித்த முகவர் மூலமாக ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

4) ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர் ஏலம் நடக்கும் நாளுக்கு முன்தினம் 5.00 மணிக்குள் கூடுதல் ஏலப்பொறுப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்றிதழுடன் கலந்து கொள்ளும் ஏல இன விபரங்களை எழுத்து மூலமாக மனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

5) ஏலத்தில் கலந்துகொள்பவர் ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்து கொள்ள வேண்டுமானால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தனித்தனியாக ஏல பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிக்கு ஏல பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்திய ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் தான் கலந்து கொள்ள முடியும். ஏலத்திற்கு ஏலப்பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்தியிருந்தால் ஏலத்தில் மட்டும் தான் கலந்து கொள்ள முடியும்.

6) ஏலம் எடுக்காதவரின் பொறுப்பு தொகை ஏலம் முடிந்தவுடன் ஏலதாரர் ஆணையருக்கு கடிதம் எழுதி கொடுத்து திருப்பி பெற்றுக்கொள்ளலாம். ஆனால் உச்ச கேள்விக்கு மேல் அடுத்த கேள்வி கேட்பவருடைய பொறுப்பு தொகையை ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் திரும்ப வழங்க வேண்டும்.

7) இந்நகராட்சியில் இதற்கு முன்ஏலம் எடுத்த ஒழுங்காக ஏலத்தொகை செலுத்தாதவர்கள் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து நிலுவையிலுள்ளவர்கள் கிரிமினல் கோர்ட்டில் தண்டணை அடைந்தவர் என்ற காரணத்திலாவது அல்லது முந்தைய ஒப்பந்தங்களின் நிபந்தனைப்படி நடத்தாததினால் மறுபடியும் நகராட்சியில் குத்தகைக்கு கொடுப்பது உசிதமில்லை என்ற காரணத்தினால் எவர் ஒருவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு கலந்து ஏலம் எடுத்தது பிற்காலத்தில் தெரிய வருமானால் அவர்கள் ஏலம் எடுத்த குத்தகையை ரத்து செய்ய ஆணையர் மற்றும் நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. அசையா சொத்துக்கள் இல்லாதவர் என்ற காரணத்திலாவது அல்லது

ஏலம் நடந்து கொண்டிருக்கும் போது அவருடைய கேள்விகளில் சந்தேகத்திற்கு இடமிருந்தாலோ அல்லது கபடமானதும் உண்மைக்கு புறம்பானதும் என்றாவது கேள்விதாரர் போதுமான சொத்து இல்லாதவர் என்ற காரணத்திலாவது மற்றும் நகர்மன்றத்திற்கு உண்மையாகவே நஷ்டம் ஏற்படுமென்று கருதப்படக்கூடியதாக இருக்கக்கூடிய ஒருவருடைய கேள்வியை காரணம் செல்லாமல் ஏலம் நடத்தும் அதிகாரி தன் யுக்திப்படி ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிட அதிகாரமுண்டு.

8) ஏலம் நடக்கும் காலத்திலோ அல்லது பிறகோ எந்த நிலையிலும் இந்த அறிக்கையில் கண்ட நிபந்தனைகளையும் தளர்த்தவோ, மாற்றவோ, சேர்க்கவோ அல்லது உரிம காலத்தை குறைக்கவோ நகர்மன்றம் மற்றும் ஆணையர் ஆகியோருக்கு பூரண அதிகாரமுண்டு. இந்த ஏல அறிக்கையில் ஏலம் நடத்துவதற்காக குறிப்பிட்டுள்ள இனங்களில் எந்த ஒரு இனத்தையும் நிர்வாக காரணங்களை முன்னிட்டு பொது ஏலம் நடத்தாமல் இருக்க மற்றும் ஆணையாளர் மற்றும் நகர் மன்றத்திற்கு பூரண அதிகாரமுண்டு.

9) அறிவிக்கப்பட்ட ஏலங்களை ஏலம் ஆரம்பிக்கும் முன்போ நடக்கும் போதோ எந்த நிலையிலும் நிறுத்தவோ, ஒத்திவைக்கவோ ரத்து செய்து விடவோ ஆணையாளருக்கோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற அவலருக்கோ அதிகாரம் உண்டு.

10) ஏலம் நடக்கும்பொழுது ஏலம் நடத்துகிறவர் அவசியமென கருதினால் அவர் குறிப்பிடும் ஒரு தேதிக்கு ஏலத்தை எந்த நிலையிலும் தள்ளி வைக்க அதிகாரமுண்டு. அவ்விதம் செய்வதில் அன்றைய தினம் எவரொருவர் அதிக தொகைக்கு ஏலம் கேட்கிறாரோ அத்தொகையானது ஏலம் மாற்றி வைக்கப்பட்டிருக்கும் நாளில் தான் கேள்வியாக வைத்து ஏலம் துவங்கும்.

11) ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரும் போது ஒர் ஆண்டிற்கான தொகை மட்டுமே குறிப்பிட்டு கேட்க வேண்டும்.

12) உரிமையாணைகள் அனைத்தும் 1920-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டத்திற்கும், அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை (ந.நி.4) நாள் 19-09-2008 மற்றும் பொது நலச்சட்டத்திற்கும், நகராட்சிகளின் சொத்து இடங்கள் நகராட்சி கையேடு விதிளுக்கும் நடைமுறைகளில் உள்ளதுடன் அவ்வப்போது வெளியாகும் அரசாணைகளுக்கும் நகர்மன்றம் செய்துள்ள அல்லது இனிச்செய்யவுள்ள பொதுக்கட்டுபாடுகளுக்கும், சிறப்புக் கட்டுப் பாடுகளுக்கும் உட்பட்டவையாகும்.

13) வைப்புத் தொகை செலுத்தாதவர்களை ஏலத்தில் பங்கெடுக்க அனுமதிக்க இயலாது.

14) ஏலம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஏலம் கோரும் தொகை அதிகமாகும் பட்சத்தில் ஏலம் நடத்தும் அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் கூடுதல் வைப்புத்தொகையை ஏலம் கோருபவர்கள் செலுத்த வேண்டும்.

15) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்களில் எவரேனும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன் உச்ச கேள்விக்கோ அல்லது உச்ச ஒப்பந்தப்புள்ளிக்கோ குத்தகை உரிமையாணையை எடுக்க விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உச்ச கேள்வியின் முழுத்தொகையும் மற்றும் ஏலத்தொகையில் 1/3 பங்கு தொகையை சேர்த்து செலுத்த விண்ணப்பிக்க வேண்டும். மனுவில் தான் கேட்க விரும்பும் தொகையை தெளிவாக குறிப்பிட்டு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்து கொள்ளலாம். இதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய ஆணையருக்கு பூரண உரிமையுண்டு. ஏலக்கேள்வி உச்சமாக இருந்தால் ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டவர்கள் மட்டும் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்ய தகுதி பெற்றவர்கள் மேலும், கூடுதல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு விருப்பம் தெரிவித்து மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கொண்டு வரும் நிபந்தனை முதல் மற்றும் அடுத்தடுத்த அழைப்புக்கு மட்டுமே பொருந்தும் இறுதி என குறிப்பிட்ட அழைப்புக்கு இது பொருந்தாது.

16) ஏலக்கேள்வி ஊர்ஜிதமான உடனேயே குத்தகை ஒப்பந்தம் (Concluded Contract) முழுமையாகிறது நகர்மன்றத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அப்படி அறிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அல்லது அலுவலகம் நிர்ணயிக்கப்படும் கால அளவுக்குள் ஒப்புகொள்ளப்பட்ட ஏலதாரர் தான் முன்னமே செலுத்தியுள்ள முதல் பொறுப்புத்தொகையின்றி ஓராண்டு உரிமையாணை தொகை முழுவதும் செலுத்த வேண்டியதோடு அல்லாமல் மின் இணைப்புக்கு பிணை வைப்புத்தொகை சம்பந்தப்பட்ட இனத்திற்கு தகுந்தவாறு செலுத்துவதோடு தாம் மேற்கொள்ளும் உரிமையாணைக்குரிய தொகை செலுத்துவதற்கும் ஏலக்கட்டுப்பாடுகளை ஒப்புக்கொண்டதற்கும் சான்றாக தம் செலவில் மன்றத்தாரால் ஏலம் ஊர்ஜிதமான 3 நாட்களுக்குள் உரிமையாணைதாரர்கள் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் உரிமையாணை ஒப்பந்தப்பத்திரம் எழுதித்தர வேண்டும். அவ்வாறு செய்து தர தவறினால் உரிமையினை அனுபவிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும், உரிமையாணையை அவர் பொறுப்பில் ரத்து செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும். இம்மறு

ஏலத்தில் நகராட்சிக்கு நட்டம் ஏற்பட்டால் அதற்கு அவரே முழு பொறுப்பாவார்.

17) ஏலம் எடுத்தவர்கள் ஏலப்பதிவேட்டிலும் ஏல அறிக்கையிலும், ஏலம் முடிந்தவுடனேயே கையொப்பம் இட வேண்டும்.

18) மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை இதர வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் நகராட்சியால் வழங்கப்பட மாட்டாது.

19) ஏலம் முடிவடைந்த பிறகு ஏலப்பட்டியலை 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 68 மற்றும் 68(எ) மற்றும் 69 பிரிவுகளின்படி நகர்மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படும். முடிவெடுக்கும் உரிமை நகர்மன்றத்திற்கு தான் உண்டு. உச்ச கேள்வியையோ, வரவிருந்த கேள்வியையோ ஏலதாரருக்கு எந்த காரணமும் காட்டாமல் தள்ளி விடவோ அல்லது ஒப்புக்கொள்ளவோ நகர்மன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

20) ஏலத்தொகை மன்றத்தால் உறுதி செய்யப்பட்ட பின் அலுவலகத்தால் நிர்ணயிக்கப்படும் உரிய காலக்கெடுவிற்குள் ஓராண்டு தொகையை முழுவதுமாக ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.

21) எவைகளுக்கு நில வாடகை அல்லது கட்டாயம் அரசுக்கு செலுத்த வேண்டுமோ அவைகளுக்கு உரிமைதாரரால் செலுத்த வேண்டிய தொகையை ஆணையாளர் உத்திரவிடப்பட்டவுடன் உரிமைதாரர் நகராட்சி அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

22) உரிமம் அல்லது உரிமையை வழங்குவது குறித்து மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட பின்பு வேறு யாராவது கூடுதல் தொகைக்கு கேட்டால் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

23) நகர்மன்ற தீர்மானத்தின்படி உரிமத்திற்கு விடப்பட்ட சொத்துக்கள் நகராட்சிக்கு தேவையென்று கருதி முன் அறிவிப்பு கொடுத்து உரிமை காலத்தின் இடையில் எந்த நிலையிலும் உரிமத்தை நிறுத்தி விட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. அப்படி நிறுத்துவதற்காக உரிமம் பெற்றவருக்கு நகராட்சி மன்ற முடிவின்படி தொகை தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். ஆனால் உரிமைதாரருக்கு வேறு யாதொரு ஈடும் கேட்க உரிமையில்லை.

24) ஒவ்வொரு உரிமமும் பொதுவாக உயர்ந்த தொகை கோரியவர்களுக்கே விடப்படும். ஆனால் எவ்வித காரணமும் தெரிவிக்காமல் எந்தவொரு

ஏலத்தையும் ஒப்புகொள்ளவாவது அல்லது உயர்ந்த கேள்வியை தவிர்த்து மற்றும் எந்தவொரு கேள்வியை எற்கவாவது அல்லது ஏலத்தை மறுத்துவிடவாவது நகர்மன்றத்திற்கோ அல்லது நகர்மன்றத்தின் அதிகாரம் பெற்ற ஆணையாளருக்கோ அதிகாரம் உண்டு. காரணம் தெரிவிக்காமலே எந்த ஏலத்தையும் ஒத்திப்போடவோ அல்லது மறுமுறை ஏலத்தில் விடவோ நகர்மன்றத்திற்கோ அல்லது ஆணையாளருக்கோ, அதிகாரமுண்டு.

25) ஏலம் எடுத்தவர்கள் நகர்மன்றத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக எக்காரணத்தைக்கொண்டும் உரிமத்திலிருந்து விலக்கிகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அப்படி ஏலத்திலிருந்து விலக்கிக்கொள்ளும் பட்சத்தில் அவர்கள் கட்டிய ஏல வைப்புத்தொகையை இழப்பதுடன் மறுஏலம் போடுவதினால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் பொறுப்பாவார்கள்.

26) இத்துடன் இணைத்திருக்கும் அட்டவணைகளிலும், சிறப்பு நிபந்தனைகளிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணங்களுக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் உரிமதாரர் அதிகம் வசூலிக்கக்கூடாது. உரிமைதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் வசூலிக்கும் எல்லாத்தொகைக்கும் ஆணையர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட முறையில் அச்சு ரசீது கொடுக்க வேண்டும். மேற்படி அச்சு ரசீது கட்டுகளை பயன்படுத்துவதற்கு முன் அலுவலகத்திற்கு கொண்டு வந்து அலுவலக முத்திரையை போட்டுக்கொள்ள வேண்டும். அலுவலக முத்திரை போடாத ரசீதுகள் செல்லுபடி ஆகாததுடன் அவ்வாறு செய்தமைக்கும் உரிமதாரருக்கு அபராதமும் விதிக்கப்படும். அந்த ரசீது சீட்டுகளில் புத்தக எண், தொடர் எண். பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரிமைதாரரால் கொடுக்கப்படும் எந்த ரசீது சீட்டையும், ஆணையரும் அவரது அதிகாரம் பெற்றவர்களும் தணிக்கை செய்ய உரிமையுண்டு. உரிமதாரர்களால் கட்டணம் வசூலிப்பதற்காக நியமிக்கப்படும் பணியாளர்களின் பெயர்களை புகைப்படத்துடன் அவ்வப்போது நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

27) எந்த உரிமைதாரரும் உரிமகாலத்திற்கு இடையில் ஒழுங்காக உரிமத்தொகையை செலுத்த தவறினால் அவருடைய உரிமம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்ய நகர்மன்றத்திற்கு பூரண அதிகாரமுண்டு. அப்படி ரத்து செய்வதால் நகராட்சிக்கு ஏற்படக்கூடிய சகல நஷ்டங்களுக்கும் மறு ஏலம் விடப்படுவதால் ஏற்படும் இழப்பிற்கும் மேற்படி உரிமதாரரே முழுபொறுப்பாவதுடன் மேற்படி நஷ்டத்தொகையை தமிழ்நாடு நகராட்சிகள் 1920-ம் ஆண்டு சட்டத்தின்

உரிய பிரிவின்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது மூலமாகவும் நகராட்சிக்கு ஈடு செய்ய உடன்பட்டவராவார்.

28) மாத வாடகையை குத்தகை மாதம் முதல் தொடங்கி ஒவ்வொரு ஆங்கில மாதம் 5-ம் தேதி அலுவலகம் வேலை செய்யும் நாளில் குத்தகை தொகைகள் முன் கூட்டியே செலுத்தப்பட வேண்டும். 5-ம் தேதி அலுவலகம் விடுமுறையாக இருந்தால் அடுத்த வேலை நாளில் செலுத்தப்பட வேண்டும். உரிமையாணைத்தொகையை மேலே குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்த தவறினால் அவர்கள் கடைக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு, தண்ணீர் குழாய் இணைப்பு முதலியவற்றை எவ்வித முன்னறிவிப்புமின்றி துண்டிக்கப்படும். குறிப்பாக குத்தகை ஆரம்பிக்கும் மாதத்திற்கு உரிய தவணை குத்தகை தொகையை முன்னதாக கட்டிய பிறகே குத்தகை ஒப்படைக்கப்படும். அதாவது 3 மாத குத்தகை தொகையுடன் சேர்த்தால் ஒவ்வொரு குத்தகையும் 4 மாதத்திற்கு குத்தகை தொகை முன்னதாக கட்ட வேண்டும். குத்தகை தொகை கட்ட தவறுபவர்கள் குத்தகை இனம் அம்மாத கூட்டத்திலேயே வைத்து குத்தகை ரத்து செய்யப்படும். இதில் மன்றத்தின் முடிவே இறுதியானது.

29) எந்தக் காரணத்தைக் கொண்டும் உரிமம் அல்லது உரிமையாணை தொகையில் எந்த பாகத்தையும் தள்ளுபடி செய்யும்படி கேட்கவும் இந்த அறிக்கையில் சிறப்பு நிபந்தனைகளில் வரையறுத்திருக்கும் கட்டணத்திற்கு கூடுதலாக வசூலித்துக் கொள்ள உரிமையளிக்கும்படி கேட்கவும் உரிமதாரருக்கு உரிமையில்லை. மேலும் உரிமதாரருக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்களை இலாகா மூலம் பராமரிப்பு செய்வதினாலாவது அல்லது அவைகளை சரி செய்து அபிவிருத்தி செய்வதினாலாவது ஏதாவது தற்காலிக இடைஞ்சல்கள் ஏற்பட்டால் அதற்காக நஷ்டஈடு கேட்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

30) உரிமையாணை கீழ் ஒப்புவிக்கப்பட்ட சொத்து முழுவதையுமாவது அல்லது அதன் ஒருபாகத்தையாவது ஒப்பந்த காலம் முடிவு பெறுமுன் எந்த சமயத்திலாவது நகர்மன்ற அல்லது பொதுக்காரியங்களுக்கு வேண்டி நகர்மன்றம் கோரி அவைகளை நகராட்சி வசம் திருப்பிக் கொடுத்தால் அவ்விதம் உரிமம் அனுபவிக்க முடியாமல் போகும் காலத்திற்கு நகர்மன்றத்தால் நிர்ணயிக்கும் கால விகிதாச்சார கிஸ்தி தள்ளுபடி அல்லது நஷ்டஈடு பெற்றுக்கொள்ள உரிமதாரர் கடமைப்பட்டவராவார். இது விஷயத்தில் அதற்காக எந்தவித நஷ்டயீடும் கோர உரிமையாணைதாரருக்கு உரிமையில்லை. மேலும் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. தவறினால் எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமையாணை ரத்து செய்யப்படும்.

31) உரிமத்திற்கு விடப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சந்தை மற்றும் இதர இடங்களில் இந்நகராட்சி ஆணையர் அவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எவ்வித பொருளும் வைக்கக்கூடாது என்றும் அல்லது எவ்வித குறிப்பிட்ட பொருளும் விற்கக்கூடாது என்றும் அந்த இடம் காலியாக வைக்கப்பட வேண்டும் என்றும் தெரியப்படுத்தினால் மேற்படி இடத்தில் எந்த பொருளும் வைக்காமல் அல்லது விற்பனை செய்யாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். இது விஷயத்தில் ஆணையரின் தீர்ப்பே முடிவானதும் உரிமையாணைதாரரையும் கடைக்காரர்களையும் விற்பனைக்கு கொண்டு வருபவர்களையும் கட்டுப்படுத்துவதாகும்.

32) உரிமதாரர் இறந்து போனாலும் அல்லது கடன்காரராக போனாலும் அவருடைய வாரிசுகள் எக்ஸ்கியூட்டர்கள் அட்மினிஸ்ட்ரேட்டர்கள் அல்லது அவருடைய அசைனிகள் மன்றத்தில் தீர்ப்பிட்டு மேற்படி உரிம ஒப்பந்த நிப்தநனைப்படி நடக்க கட்டுப்பட்டவராவார்கள். ஆனால் மன்றம் உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானித்தால் மேற்படியார்கள் உரிமத்தை மேற்கொண்டு நடத்த முடியாது.

33) உரிமையாணை பெற்றவர் இதில் குறிப்பிட்ட எந்தவொரு நிபந்தனைப்படியும் நடக்க தவறினாலும் உரிமையாணைதாருக்கு எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்காமல் சம்மந்தப்பட்ட கட்டிடத்தில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பை துண்டித்து மின் சப்ளையை நிறுத்தவோ உரிமையாணைதாரரையும் அவர் பொருட்களையும் உரிமையாணை ஸ்தலத்தில் இருந்து அப்புறப்படுத்தி இடத்தை பூட்டி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு இதனால் உரிமையாணைதாரர் தொழில் செய்வதில் ஏற்படும் இடையூறுகளுக்கும், நஷ்டங்களுக்கும் நகர்மன்றம் பொறுப்பல்ல.

34) உரிமைதாரர் பட்டியலில் கண்டுள்ள இடங்களில் மின் இணைப்பு தேவையானவற்றிற்கு மின் வாரியத்திடம் தன் சொந்த பொறுப்பில் ஆணையர் குழித்துறை நகராட்சி பெயரில் தனி மின் இணைப்பு பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் மின்கட்டணம் கூடுதல் வைப்புத் தொகை மீட்டர் பழுது கட்டணம் உரிமம்/ குத்தகைதாரரை சார்ந்தது.

35) இத்தொகைகளை சரிவர கட்ட தவறினாலும் அல்லது வேறேதேனும் தவறுகள் செய்வதாலும் மின்சார சட்ட திட்டங்களின் பேரில் உரிமையாணைதாரர் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி இடத்தில் உள்ள மின் இணைப்பு கண்டிப்பாக உரிமையாணைதாரரின் பெயருக்கு தரப்பட மாட்டது.

36) மின் மீட்டர் பழுதுபட்டாலோ அல்லது மின்சார விதிகளுக்கு புறம்பாக குறைபாடுகள் ஏதாவது மின்சார துறையினரால் கண்டுபிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு உரிமையாணைதாரரே முழு பொறுப்பாவார். மேலும் மின் இலாகாவால் விதிக்கப்படும் தண்டத்தீர்வைக்கு உரிமையாணைதாரர் முழுபொறுப்பாவார். நகராட்சியானது எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

37) நகராட்சி உரிமையாணை இடங்களில் கூடுதலாகவோ அல்லது ஒரு பகுதிக்கோ மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் அந்தந்த உரிமையாணைதாரர் அவருடைய சொந்த பொறுப்பிலும், செலவிலும் மின்வாரியம் மூலம் அமைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெறப்படும் மின் இணைப்பு "ஆணையர், குழித்துறை நகராட்சி" கொடுக்கப்படும். அவ்வாறு பெறப்படும் மின் இணைப்பிற்கு ரூ.5000/- வைப்புத் தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். மேற்படி மின் இணைப்பு கொடுப்பது ஆணையர் முடிவுப்படி நடக்க உரிமையாணைதாரர் கடமைப்பட்டவராவார்.

38) உரிமத்திற்கு விடப்பட்ட இடத்தில் நகராட்சியில் பொருத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகள் இதர விளக்குகள் மற்றும் இதர தளவாட மற்றும் எல்லா சாமான்களின் பாதுகாப்பிற்கும் உரிமைதாரரே பொறுப்பாளியாவார். இதில் ஏதேனும் குறைபாடுகள் தெரியவந்தால் அதை உடனடியாக திருப்பித்தர வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் மேற்படி பொருளின் கிரையத்தை நகராட்சி அலுவலகத்தில் செலுத்த உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். அப்படியும் கட்டத்தவறினால் அவர் கட்டிய வைப்புத் தொகையில் இருந்து மேற்படி தொகை பிடித்தம் செய்யப்படும்.

39) நகராட்சியின் முத்திரையை போட்டுக்கொள்ளாமல் சீட்டுகளை வழங்கும் உரிமதாரர்கள் பேரில் கடும் நடவடிக்கை எடுத்து அவர்களது விளக்கம் பெறாமலேயே அம்மாதிரி கட்டுப்பாட்டிற்கு மீறி அவர்கள் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூ.1000/-க்கு அதிகபடாமல் அபராதம் விதிக்கப்படும். அவ்வாறு விதிக்கப்படும் அபராதம் ரூ.5000/-க்கு அதிகப்படுமானால் உரிமையாணை பெற்றவர் நகராட்சி மன்றத்திற்கு முறையீடு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் வசூல் செய்யும் கட்டணத்திற்கு கணக்கு விபரம் சரியாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அக்கணக்குளை பரிசீலனை செய்ய அனுமதிக்க உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

40) உரிமையாணை காலத்தில் உரிமையாணை பெற்றவர் பிறர் பெயரிலாவது அல்லது உரிமையாணை பெற்றவர் பிறராவது தொடர்ந்தால் அவைகளுக்காக ஏற்படும் பொருள் செலவிற்கோ யாதொரு பகுதியும் நகராட்சி ஏற்றுக்கொள்ள முடியாததுடன் நகராட்சி எந்த விதித்திலும் இதற்கு பொறுப்பேற்காது.

41) உரிமையாணை காலத்தில் இந்த நிபந்தனைகளில் உள்ள இனங்கள் அரசு அல்லது நகராட்சியால் மாற்றப்பட்டாலும் அல்லது எங்கு இயங்கினாலும் உரிமையாணைதாரர் அங்கு இதில் கண்டுள்ள கட்டணங்களையே எடுத்துக்கொள்ள வேண்டியது. அதற்காக நகராட்சியிலிருந்து எந்தவித நஷ்டஈடோ அல்லது உரிமையாணையோ ரத்து செய்யும்படி கேட்கவோ உரிமையாணைதாரருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

42) உரிம காலத்தில் உரிமத்திற்கு விடப்பட்டுள்ள இடங்களில் சட்டம், ஒழுங்கு (Law and Order) அமைதி நிலவ அவ்வப்போது உரிமம் பெற்றவர் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் அவர்கள் தவறுவார்களோயானால் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படுமே. அவர்கள் பேரில் நகராட்சியால் எடுக்கப்படும்.

43) உரிமம் இடத்தில் உரிமதாரர் தன்னால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிப்பந்திகள், ஏஜெண்டுகள் முதலானவர்கள் பெயர்களை அவ்வப்போது ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும். மேற்படி சிப்பந்திகளுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு 6 மாதம் தொகையினை கணக்கீட்டு தொழில்வரி செலுத்தப்பட வேண்டும். மேலும், மேற்படி நிறுவனத்திற்கான தொழில்வரி, D&O உரிமம் ஆகிய கட்டணங்களையும் தவறாது செலுத்த வேண்டும். அவர்கள் ஒழுங்காக நடத்த தவறிய காரணத்திற்காகிலும் வேறு எந்த காரணத்திற்காகிலும் உரிம காலத்தில் வேலைச் செய்ய கூடாது என ஆணையாளர் தெரிவித்தால் உரிமதாரர் அதற்கு கட்டுப்பட்டு அந்த சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும். ஆணையாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இல்லாமல் மறுபடியும் அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள கூடாது.

44) உரிமதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கைகள், குறிப்பாணைகள் அல்லது உத்தரவுகள் அவரின் கடை வாசஸ்தலத்திற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் போடப்பட்டால் அவரிடத்தில் அது சரியான முறையில் சார்பு செய்ததாகவே கருதப்படும்.

45) எல்லா உரிமையாணை பெற்றவர்களுக்கும் செல்லத்தக்கதாய் இருப்பதுடன் உரிமத்திற்கு இச்சரத்துகள் யாவும் பிரிக்கப்படாத நிபந்தனைகளாக கருதப்படுவதால் இவைகளில் நகல் உரிமம் ஒப்பந்த பத்திரம் அல்லது உடன்படிக்கையுடன் சேர்க்க வேண்டியது அவசியமாக மாட்டாது.

46) தொடர்ந்து வேண்டுமென்றே சிறப்பு அல்லது பொதுக்கட்டுபாடுகளை உரிமதாரர் தவறுவதாக ஆணையாளருக்கு தெரியவந்தால் மேற்படி உரிமத்தை ரத்து செய்ய மன்றத்திற்கு அதிகாரமுண்டு.

47) உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துகள் முழுவதையும் உரிம காலம் முடிவு பெற்றவுடன் நல்ல நிலையில் ஒப்புவிக்க வேண்டும். உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துக்கள் முழுவதையும் உரிமதாரர் கவனிக்காததினால் சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் உரிமதாரரே அதற்கு பூரண பொறுப்பாளியாவார். உரிமதாரர் செய்கையினாலாவது அல்லது தப்பிதத்தினாலாவது நகராட்சி சொதுக்களுக்கு ஏற்படும் சகல மராமத்து செலவுகளையும் உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

48) ஆணையரின் உத்தரவின் பேரில் உரிமையாணை இடங்களில் மாஜிக், சர்க்கஸ் மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டால் அதனால் கிடைக்கும் இதர வாடகையும் வருமானமும் நகராட்சிக்கே சொந்தமானது.

49) மார்க்கெட்டுகளிலும் ஏலம் விடப்படும் இதர உரிமையாணை இடங்களிலும் சேரும் சாணம், குப்பை முதலியவைகளை உரிமதாரர் தனது சொந்த செலவில் அகற்றி நகராட்சி உரகிடங்கிற்கு கொண்டு செல்ல வேண்டும்.

50) உரிமையாணைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இடங்களுக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் எந்த பொருட்களையும் விற்கவோ அல்லது வைக்கவோ கூடாது. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமையாணை ரத்து செய்யப்படும்.

51) உரிமையாணைதாரர் நாம் வசூலிக்க அனுமதிக்கப்பட்ட கட்டண விகிதத்தை அறிவிப்பு பலகையில் தனது சொந்த செலவில் எழுதி அப்பலகையை எல்லோருக்கும் தெரியும் படியான இடத்தில் அமைத்து பாதுகாத்து வரவேண்டும். அந்த விகிதப்படி கட்டணங்களை வசூலிப்பது உரிமையாணைதாரரின் உரிமையும் பொறுப்பாகும். அதன்படி வசூலிக்க இயலாமல் போனால் உரிமையாணைதாரரே தகுந்த நடவடிக்கை

எடுத்துக்கொள்ள வேண்டியது. அது சம்மந்தமான உரிமையாணைதாரர் மன்றத்தின் பேரில் நஷ்டாஈடு கோர உரிமையில்லை.

52) மார்க்கெட்டுகள், ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் இதர உரிமையாணை இடங்களின் யாதொரு விதமான விளம்பரங்கள் அலுவலக உத்திரவின்றி எழுதாமலும், ஒட்டப்படாமலும் உரிமையாணைதாரர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

53) உரிமதாரர் இந்த ஏல அறிக்கையிலுள்ள ஏதாவதொரு நிபந்தனைபடி நடக்கத் தவறினாலும் மேற்படியாரின் உரிமம் உடனே ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும். அதனால் மன்றத்திற்கு ஏற்படும் நஷ்டத்தையும் மற்ற இதர செலவிகளையும் உரிமதாரரால் கட்டப்பட்டு இருக்கும் டேவணித்தொகையிலிருந்தோ அல்லது நகராட்சி ஒப்பந்தகாரரால் கட்டப்பட்டிருக்கும் டேவணியிலிருந்தோ அல்லது எந்தவகை தொகையிலிருந்தோ ஈடு செய்து கொள்ளவும் அனுசரிக்காததற்கான டேவணியை சொந்தமாக்கிக்கொள்ளும் விஷயத்திலோ அல்லது பணத்தை உளவடைத்துக்கொள்வதோ மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். மேற்படி தீர்மானத்தை சிவில் கோர்ட்டில் விவாதிக்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

54) இந்த பொது நிபந்தனைகளில் ஏதாவதொன்றையோ அல்லது சம்மந்தப்பட்ட இனத்தின் கீழ் உள்ள நிபந்தனைகளில் ஏதாவதொன்றையோ உதாசீனம் செய்தால் அப்படி செய்யப்படும் ஒவ்வொரு தடவைக்கும் ரூ.1000/-க்கு மேற்படாமல் உரிமையாணைதாரருக்கு அபாராதம் விதிக்க ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதைத்தவிர உரிமையாணையை ரத்து செய்யவும் இலாகா மூலம் நடத்தும் மறுபடியும் ஏலம் விடவும் உரிமை உண்டு. உரிமையாணையை அப்படி ரத்து செய்வதாலும் மறு ஏலம் விடுவதாலும் இலாகா மூலம் நடத்துவதாலும் ஏற்படும் நஷ்டங்களுக்கு உரிமையாணைதாரரே பூரண ஜவாப்தாரியாவார். ஆனால் மேலே சொன்னபடி மறு ஏலத்திலோ இலாகா மூலம் நடத்துவதினாலோ ஏற்படும் லாபத்தில் உரிமையாணைதாரர் எவ்வித உரிமையோ, பங்கோ கேட்க உரிமையில்லை. டேவணியிலிருந்தோ அல்லது மற்ற எந்தவகை தொகையிலிருந்தோ ஈடு செய்து கொள்ளவும் மன்றத்திற்கு சொந்தமாக்கிக் கொள்ளவும் மேலே சொன்னப்படி நிபந்தனைகளை அனுசரிக்காததற்காக டேவணியை சொந்தமாக்கி கொள்ளும் விஷயத்திலோ அல்லது பணத்தை உள்வடைத்துக் கொள்வதோ மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். மேற்படி தீர்மானத்தை சிவில் கோர்ட்டில் விவாதிக்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

55) உரிமதாரர் கட்டப்பட்டிருக்கும் வைப்பு தொகையிலிருந்து விதிக்கப்படும் அபராதத்திற்கு முழு பாகத்தையோ உள்வடைத்துக் கொள்ளலாம். அப்படி உள்வடைத்துக் கொள்ளப்படும் தொகையை உத்தரவு கிடைத்த ஒருவார கெடுவிற்குள் உரிமைதாரர் மறுபடியும் வைப்புத் தொகையாக கட்டிவிட வேண்டியது. தவறினால் மேற்படி தொகை உரிமபாக்கி வசூலிக்கப்படுவது போல் வசூலிக்கப்படும்.

56) உரிமம் சம்மந்தமாக ஏற்படும் பாக்கி தொகைகளை உரிமதாரருக்கு நகராட்சியிலிருந்து கிடைக்க வேண்டிய இதர எந்த தொகையிலிருந்து ஒப்புதல் ஏதுமின்றி உள்வடைத்துக் கொள்ள மன்றத்திற்கு அதிகாரமுண்டு.

57) உரிமம் இடத்தில் எவ்வித பிராணிகளையும் கட்டவோ, வளர்க்கவோ கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது. மீறும் உரிமதாரர்களுக்கு ஆணையாளர் அவர்களால் அபராதம் விதிக்கப்படும்.

58) எதிர்பாராதவிதமாக ஏற்படும் புயல், காற்று, வெள்ளம், கலகம், தீ விபத்து, தொற்றுநோய் ஆகிய காலங்களில் தற்காலிக உரிம தலத்தை மூடச் சொல்வதற்கு ஆணையாளருக்கு உரிமையுண்டு. அப்படிப்பட்ட காலத்திற்கு உரிமம் பெற்றவருக்கு ஏற்படக்கூடிய பொருள் இழப்பிற்கோ கட்டண வருவாய் குறைவிற்கோ அல்லது வேறு எந்த நஷ்டத்திற்கோ யாதொருவிதமான ஈடும் நகராட்சியிலிருந்து கோர உரிமதாரருக்கு உரிமையில்லை.

59) நகராட்சி உரிம இடங்களுக்கு உரிமத்தொகை செலுத்தாமல் இருந்தாலும், உரிமதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்படாமலேயே ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராவது மேற்படி இடம் பூட்டப்பட்டிருந்தாலும், பூட்டை உடைத்து அல்லது வேறு விதத்திலாவது இடங்களில் நுழைந்து அதனுள் உள்ள சொத்தை கைப்பற்றிக்கொண்டு நகர்மன்றத்தால் வசூல் ஏற்பாடு செய்ய அதிகாரம் உண்டு. அவ்வாறு கைப்பற்றியதால் ஏற்படும் செலவுகள் அல்லாத நஷ்டத்தை ஏல சரத்துக்களின்படி நடத்த தவறிய உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

60) உரிம காலத்தில் மதுபானம் மற்றும் அரசினால் தடை செய்யப்பட்ட வகையறாக்கள் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது.

61) உரிமம் சம்மந்தப்பட்ட இடம் அல்லது இதர சொத்துக்களை ஒப்படைப்பதில் உரிமம் தொடங்கும் தேதியில் உரிமதாரருக்கு ஒப்புவிக்க தாமதமோ தடையோ ஏற்பட்டால் அதனால் உரிமம்

ரத்தாகாது. தாமதிக்கும் கால அளவிற்கு உரிம விகிதம் தொகையை மன்றம் முடிவு செய்யும் அளவிற்கு தள்ளுபடி செய்து கொடுப்பதைத் தவிர நஷ்டத்திற்கு நகர்மன்றம் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

62) குத்தகை உரிமத்திற்கான விதிமுறை நடைமுறை மற்றும் இதர காரணங்களினால் நகராட்சி நிர்வாகம் குத்தகைதாரர்களுடைய குத்தகை தொடர அனுமதிக்க வேண்டாம் என கருதினால் இதற்காக நகர்மன்றம் ஒப்புதலுடன் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும். மேற்குறித்த காரணங்கள் ஏதாவது ஒன்றிற்கு குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டால் குத்தகை உரிமம் ரத்து செய்வதற்கான உத்தரவு அளிக்கப்பட்டவுடன் மேற்படி கடையை நகராட்சி வசம் குத்தகையை ஒப்படைக்க வேண்டும். மேற்படி குத்தகை உத்தரவை குத்தகை ரத்தானவர் வாங்க மறுத்தால் மேற்படி உத்தரவு அதற்குரிய கடையில் நகராட்சி அலுவலரால் ஒட்டப்படும். அவ்வாறு நகராட்சி பணியாளர்களால் அறிவிப்பு ஒட்டப்படுவதே குத்தகைகாரரிடம் நேரடியாக சார்பு செய்வதற்கு சமமாகும்.

63) குத்தகை ரத்து செய்யப்பட்டவர் மேற்படி குத்தகையை நகராட்சி வசம் ஒப்படைக்க மறுத்தால் நகராட்சியின் உரிய அதிகாரம் பெற்றவரால் மேற்படி குத்தகையை நகராட்சி தன் வசப்படுத்திக் கொள்ளும்போது தாங்கள் குத்தகை அனுபவித்து கொள்ளும் அளவிற்கு நகராட்சி பொறுப்பும் ஏற்காது, எந்தவித இழப்பு தொகையையும் அளிக்காது.

64) 2021-2022, 2022-2023, 2023-2024-ம் ஆண்டுகளில் குத்தகை இனம் முழு தொகையில் வருமான வரி (ICS) வருமானவரித்துறை (Income Tax Office)-யாரால் நிர்ணயிக்கப்படும் சதவிகிதத் தொகையினை குழித்துறை நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். வருமானவரித் தொகையில் ஏதேனும் விடுதல் விடுப்பட்டிருந்தால் விடுதல் தொகையையும் ஏல உரிமதாரர் செலுத்த வேண்டும். இதன் பின்னர்தான் இவ்வினக்குத்தகைக்கான உரிமையாணையை ஊர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

65) முதலாம் ஆண்டு முடிவில் இரண்டாம் ஆண்டிற்கான கத்தகை தொகை (முதலாம் ஆண்டு குத்தகைத்தொகையுடன் 5% தொகை சேர்த்து) ஒரே தவணையாக (முந்தைய நிதியாண்டு) ஜனவரி 31-க்குள் செலுத்தி உரிமம் புதுப்பிக்க வேண்டும். இரண்டாம் ஆண்டின் முடிவில் இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகையுடன் 5% தொகை சேர்த்து ஒரே தவணையாக செலுத்தி மூன்றாம் ஆண்டிற்கான உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

66) உரிமை அல்லது உரிமையாணைக் காலத்தில் உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுமையும் அல்லது எந்த பாகமாவது நகராட்சிக்குத் தேவையானால் உரிமதாரர் எவ்வகை தடையுமின்றி எந்தவித நஷ்ட ஈட்டுத்தொகையும் கோராமல் நகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இதில் நகர்மன்ற தீர்மானமே முடிவானதாகும். சந்தையை அல்லது சந்தையில் உள்ள கடைகளை நகராட்சி திருத்தி அமைக்கவோ, செப்பனிடவோ செய்யும் செயல்களினால் உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படும் வணிகக் குறைவிற்கோ, கேட்டிற்கோ யாதொரு நஷ்டஈடும் கேட்க அவருக்கு உரிமையில்லை.

67) உரிமம் அல்லது உரிமையாணை இடத்தில் எழுத்து மூலமாக உரிய ஒப்புதல் பெறப்பட்டிருந்தாலொழிய எவ்வகை மாறுதலாவது அல்லது புதிய கட்டிட வேலையாவது செய்யக்கூடாது. ஆனால் நகராட்சியின் மூலம் எவ்வகை மாறுதலும் செய்ய உரிமையுண்டு. அதை தடுக்க உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

68) ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக உரிமையாணை பெற்ற இடத்தை அந்தக் குறிப்பிட்ட காரியத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். நகராட்சியால் அனுமதி வழங்கப்படாத தொழில் ஏதும் செய்யக்கூடாது. மேலும் அரசால் தடை செய்யப்பட்ட தொழில்கள் ஏதும் நடத்தல் கூடாது.

69) உரிமையாணை பெற்றவர் தாம் உரிமையாணையையோ அல்லது உரிமத்தையோ மற்றவர்களுக்கு மாற்றவோ அல்லது விற்று விடவோ கூடாது. மேலும் அவைகளை வேறு யாருக்கும் உரிமை மாற்றிக் கொடுக்கவோ அல்லது உள் வாடகைக்கு விடவோ கூடாது. இதை மீறி செய்பவர்களை கட்டிடங்களிலிருந்து அப்புறப்படுத்தி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை உடனடியாக ரத்து செய்யப்படும். இதனால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நஷ்டங்களையும் அன்னாரிடமிருந்து வசூலிக்கப்படும். மேலும் அன்னார் மீது வழக்கும் தொடரப்படும். மேற்படி வகைக்கு நகராட்சியிலிருந்து எவ்வித நஷ்டஈடும் கேட்க உரிதாரருக்கு உரிமை கிடையாது.

70) எல்லா உரிமதாரர்களும் வியாபாரம் சம்மந்தமான கணக்குகளை அவரவர்களின் பெயரில் தான் வைக்க வேண்டும். வியாபாரம் சம்மந்தமாக பெறும் பல்வேறு இலாகா சம்மந்தப்பட்ட அனுமதிகளையும், உரிமங்களையும் தொழில்வரி, வருமானவரி, விற்பனைவரி, சேவைவரி போன்ற எல்லா வரிகளையும் அவர்கள்

பெயரிலே நிலுவையின்றி செலுத்தி அதற்கான சான்றாவணங்களை தங்கள் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

71) உரிமதாரர் தன் சொந்த பொறுப்பிலும் செலவிலும் அட்டவணையில் கண்ட தொகையை வசூல் செய்து கொள்ள வேண்டியது. வழக்குகள் ஏற்பட்டோ அதன் தீர்ப்பின் படியோ தொகைகளை வசூல் செய்ய இயலாமல் போனாலும் நகராட்சி எவ்வித நஷ்டத்திற்கும் பொறுப்பு ஏற்காது. அட்டவணையில் கண்டபடி வசூல் செய்ய சட்டப்படி நடவடிக்கை எடுக்க உரிமைதாரருக்கு முழு உரிமை உண்டு. அரசாங்க கணக்கு தணிக்கை செய்வோர் ஏதாகிலும் தொகையை உரிதாரரிடம் வசூலிக்கும்படி ஆணையிட்டால் அந்த தொகையை செலுத்துவதற்கு உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்.

72) இந்த அறிக்கையில் கண்டுள்ள கட்டுபாடுகளின் அடிப்படையில் உரிமையாணை பெற்றவர் நடக்கத்தவறினால் உரிமையைத் தாமாகவே நிறுத்திக் கொண்டதாகக் கருதப்படும். மேலும் இதன் விளைவாக ஏற்படும் எல்லா பொருட்களையும் அவர் கட்டியிருக்கும் பொறுப்புத் தொகையிலிருந்தோ மற்றெந்த வகையிலோ முழுவதையுமோ பகுதியையுமோ ஈடு செய்து கொள்ள நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. ஒப்பந்தக் கட்டுப்பாடுகளின்படி செயல்படாத குற்றத்திற்கு பொறுப்புத் தொகையை பறிமுதல் செய்ய நகர்மன்றத் தீர்மானமே முடிவானதாகும்.

73) உரிமம் அல்லது உரிமையாணையை ரத்து செய்து மறு ஏலம் கோருவதற்கும் நகராட்சி ஆட்களை கொண்டே உரிமம் அல்லது உரிமையாணை பெற்று வேலையை நடத்துவதற்கும் நகர்மன்றம் உரிமையுடையதாகவும் அவ்வண்ணம் ரத்து செய்து மறு ஏலம் போடுவதாலும் நகராட்சி ஆட்களை கொண்டு நடத்துவதாலும் ஏற்படும் செலவுகளுக்கும், நஷ்டங்களுக்கும் உரிமதாரரே பொறுப்பாளியாவதுடன் அவருடைய பொறுப்புத் தொகையை எந்தக் காலத்திலும் பறிமுதல் செய்து கொள்வதற்கும் இணங்கியவராவார். அப்படி மறு ஏலத்திலோ நகராட்சியால் நடத்துவதாலோ ஆதாயம் ஏற்படின் அதில் பங்கு பெற உரிமதாரருக்கோ அல்லது உரிமையாணை பெற்றவருக்கோ உரிமையில்லை.

74) உரிமதாரருக்கு அல்லது உரிமையாணை பெற்றவருக்கு விதிக்கும் அபராதங்கள் அல்லது அவரிடமிருந்து வரவேண்டிய பாக்கிகள் முதலியவற்றை உரிதாரரால் உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டும். தவறினால், அறிவிப்பின்றி அவர் செலுத்தவிருக்கும் பொறுப்புத் தொகையிலிருந்து ஈடு செய்துக் கொள்ளப்படும். அப்படி ஈடு செய்து கொண்ட விவரத்தை தெரிவித்த தேதியிலிருந்து ஒருவார கெடுவிற்குள்

ஈடு செய்த தொகையை கட்டிவிட வேண்டும். தவறினால் மேற்படி ஈடு செய்த தொகையை உரிமம் தொகையில் நிலுவை நின்றதாக கருதி உரிமம் அல்லது ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

75) உரிமம் அல்லது உரிமையாணை பெற்றவர்கள் குறிப்பிட்ட இடம் தவிர மற்ற எந்த இடத்திலும் குறிப்பாக உரிம இடங்களின் முன்னாலும் வெளிப்பக்கங்களிலும் நடைவழிப்பாதைகளில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்து இடையூறு ஏற்படுத்தக் கூடாது. கடைகளுக்கு முன்னாலோ, பின்னாலோ, பக்கவாட்டிலோ எந்த விதமான தன் அமைப்புகள் அமைத்தோ வேறு வழியிலோ சாமான்கள் தொங்கவிடவோ, சாமான்கள் விற்பனைக்கு வைக்கவோ, விளம்பரப்படுத்தவோ கூடாது அவ்விதம் மீறி நடந்தால் முன் அறிவிப்பின்றி அவைகளை துறை மூலம் அப்புறப்படுத்தி அவைகளை ஏலம் விட ஆணையர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

76) பொது நிபந்தனைகளில் குறிப்பிட்டபடி அபராதம் விதிக்கப்படும். அவ்வகையில் உரிமதாரருக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை நகர்மன்றத்திடம் கேட்க உரிமை கிடையாது. நிரந்தர அமைப்புகள் அமைத்தல், தற்காலிகமாகத் தட்டிகள் அமைத்தல் போன்ற எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் உரிமம் அல்லது உரிமைகளை பெற்ற இடத்தை சுற்றி செய்யக்கூடாது. இந்த நிபந்தனைகளை எந்தவிதத்திலாவது மீறியவர்களின் உரிமையாணை அல்லது உரிமம் ரத்து செய்யப்படும்.

77) உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்பட்ட சொத்துக்களின் ஏதாவது சேதங்கள் ஏற்பட்டிருந்தால் நகர்மன்றம் செயல்படுகிற தீர்மானப்படியுள்ள நஷ்ட ஈட்டை (Compensation) உரிமதாரர்கள் செலுத்திவிட வேண்டும். இது தொடர்பாக நகர்மன்றத் தீர்மானமே முடிவானது. மேலும் உரிமதாரர்கள் உரிமம் காலக்கெடு முடிவடைந்தவுடன் மேற்படி இடத்தை காலி செய்து மேப்டி சொத்துக்களையும் அதில் உள்ள பொருட்களையும் நகராட்சியிடம் நல்ல நிலைமையில் ஒப்புவித்துவிட வேண்டும். தவறினால் உரிமதாரர் சொத்தை உரிமை கொள்வதோடு அதனால் நகராட்சிக்கு ஏற்படும சகல நஷ்டங்களுக்கும் உரிமைதாரரே பொறுப்பாவார். எக்காரணத்தைக் கொண்டும் உரிமதாரர் ஒப்புக்கொண்ட உரிமையை திரும்ப ஒப்படைக்க (Surrender) உரிமை கிடையாது. அப்படித் திரும்ப ஒப்படைக்க விரும்பினால் நகராட்சி எந்தவித நஷ்டாஈடும் வழங்காது. மேலும், அதனால் ஏற்படும் பணிப்பொருள் இழப்புகளுக்கும் உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும.

78) உரிமையாணை காலம் முடிந்தவுடன் நகராட்சி இடங்களை நகராட்சிக்கு ஒப்புவிக்கத் தவறினால் உரிமையாணை பெற்றவரது ஒப்புதல் இல்லாமல் நகராட்சியால் பொறுப்பு எடுக்கப்படும். மேற்படி கட்டிடங்களின் சுவர்களுக்காவது கீழ் நிலத்திற்காவது அல்லது நகராட்சிப் பொருட்களுக்காவது ஏதேனும் கெடு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் செப்பனிடுதல் செலவுகள் உரிமையாணை பெற்றவரிடமிருந்து வசூலிக்கவும், நகர்மன்றத்திற்கு முழு உரிமை உண்டு.

79) வருமானவரி, ஆம்பர வரி, சேவைவரி, தொழில்வரி மற்றும் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய இதர வரிகளை உரிமைதாரரே செலுத்த கடமைப்பட்டுள்ளார்.

80) நகராட்சியின் எழுத்து மூலமான உத்தரவை முன்னதாக பெறாமல் உரிமம் பெற்றவர் உரிமையாணையை இன்னொருவருக்கு மாற்றவாவது அல்லது உள் உரிமத்திற்கு கொடுத்தால் ஏலதாரர் கட்டியிருக்கும் வைப்புத் தொகையை நகர்மன்றத்திற்கு ஆதாயமாக்கிக் கொள்வதுடன் உரிமையாணையை ரத்து செய்து அந்த இடம் இந்த உரிமம் பெற்றவர் சொந்த பொறுப்பில் மறுஏலம் விடப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் இவரே பூரண பொறுப்பாளியாவதுடன் இந்த நஷ்டங்களை ஈடு செய்யவும் கட்டுப்பட்டவராவார்.

81) ஏல அறிவிப்பில் அல்லது ஒப்பந்த பத்திரத்தில் இருக்கும் வார்த்தைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு நகராட்சி ஆணையாளர் அவர்களால் கொடுக்கப்படும் விளக்கமே முடிவானதாகும். இந்த அறிக்கையில் கண்ட கட்டுப்பாடுகளுடன் வேறு எந்த கட்டுபாடுகளை சேர்க்கவோ மாற்றவோ ஆணையாளருக்கு உரிமையுண்டு.

82) ஆணையாளர் மற்றும் அவரது அலுவலர்களுக்கும் நிர்வாகத்தின் அவசியத்தை முன்னிட்டு அவ்வப்போது கொடுக்கும் உத்தரவுகளின்படி நடந்து வர உரிமதாரர் கட்டுபட்டவராவார்.

83) உரிமையாணை ஆணையர் அல்லது மேற்படியாரின் அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வைக்கும் கட்டுபாட்டிற்கும் உட்பட்டதாகும்.

84) இந்த விளம்பரத்தில் கண்டுள்ள யாதொரு நிபந்தனைகள் சட்டதிட்டங்கள் விதிக்க அரசு ஆணைகள் இதர ஆணைகள் மற்றும் இவை அனைத்தும் சம்மந்தமாகவும் ஆணையர் கொடுக்கும் விளக்கமே முடிவானது.

85) உரிமம் அல்லது உரிமையாணையில் ஏற்படும் எந்த சிக்கல்கள், பொது சிறப்பு கட்டுப்பாடுகள் குறித்தும் உரிம ஒப்பந்த பத்திரத்தில் எந்த சொல்

அல்லது வாக்கியத்தின் பொருள் பற்றியும் ஆணையர் அவர்களின் தீர்ப்பும் விளக்கமும் முடிவானது. உரிமதாரர் அதற்குக் கட்டுபட்டு நடக்க வேண்டியராவார்.

86) உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கும் அவருடைய அதிகாரம் பெற்ற பணியாளர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டு நடக்க வேண்டும். உரிமம் அல்லது உரிமை இடங்களில் ஆணையரோ அல்லது அன்னாரின் அனுமதி பெற்றவர்களோ உரிமதாரர் அல்லது உரிமை பெற்றவரின் முன் அனுமதி பெறாமல் எந்த நேரத்திலும், எத்தனை தடவைகளும் உரிமை அல்லது உரிமையிடத்தில் நுழையவோ, நுழைந்து பரிசோதனைகள் செய்யவோ மின் இணைப்புகளை துண்டிக்கவோ உரிமை உண்டு. ஆணையர் அவர்களால் அவ்வப்போது அனுப்பப்படும் ஆணை உரிமதாரர் அல்லது உரிமை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்.

87) எவ்வித முன்னறிவிப்பின்றி இந்த அறிவிக்கையில் கண்ட கட்டுபாடுகளுடன் வேறு எந்த கட்டுப்பாட்டைச் சேர்க்கவும் அல்லது மேற்படி கட்டுபாடுகளில் மாற்றம் செய்ய நகர்மன்றத்திற்கு எல்லா உரிமை உண்டு. அவ்வித மாற்றத்திற்கு உரிதாரர் கட்டுப்பட்டவராவார்.

88) உரிமயாணைதாரர் என்று வரும் இடங்களில் லைசென்ஸ்தாரர் என்ற முறையே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

89) ஏலம் வரும் இடங்களில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

90) ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புத் தொகை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்றிதழை 01-04-2018 முதல் 37 மாதங்களுக்கு வரும்படி (அதாவது உரிமம் ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 37 மாதங்கள்) ஆணையர் குழித்துறை நகராட்சி என்ற பெயரில் முன்னதாகவே செலுத்தியிருந்தாலொழிய ஏலம் கோர யாருக்கும் அனுமதி கோரப்பட மாட்டாது. நகராட்சியில் வேலை செய்வதற்காகவோ, சாமான்கள் வாங்குவதற்காகவோ மற்றும் இதர காரியங்களுக்காகவோ செலுத்திய வைப்புத் தொகையினை இந்த ஏலத்திற்கான வைப்புத் தொகைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

91) உரிமைதாரருக்கு இந்நகராட்சியின் உரிமத்திற்காக ஒப்படைக்கப்படும் கட்டிடங்கள் அல்லது சொத்துகளின் பேரில் எவ்வித பாத்தியமோ அல்லது தமிழ்நாடு வாடகை கட்டுபாடு சட்டம் மற்றும் விதிகளின்படி

வாடகை பாத்தியமோ தமிழ்நாடு குத்தகை பாதுகாப்பு சட்டம் மற்றும் விதிகளின்படி குத்தகைதாரர் பாத்தியமோ கிடையாது.

92) இந்த அறிக்கையில் கண்டிருக்கும் எல்லா உரிமை ஆணைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் ஏலகாலத்தில் கட்டப்படும் பொறுப்புத் தொகையை அந்தந்த உரிமையாணை பெற்றவருக்கு கணக்குகள் முழுவதும் தணிக்கையான பிறகுதான் திருப்பி தரப்படும். தணிக்கையில் ஏதாவது தொகை பிடிக்க நேர்ந்தால் அதை பிடித்தம் செய்து கொண்டு மீதிதான் திருப்பி கொடுக்கப்படும்.

93) கடைகளுக்கு மாத வாடகை பிரதி மாதம் 5 மற்றும் மே 5 தேதிக்குள் செலுத்த வேண்டும். மேற்படி குறிப்பிட்ட நாளில் தொகை செலுத்த தவறினால் தவறிய நாள் முதற்கொண்டு செலுத்தப்படும் தேதி வரை 18% வீதம் அபராத வட்டி சேர்த்து உரிமை தொகையுடன் செலுத்த வேண்டும். அரசாணை நிலை எண்.26 (ந.நி.ம.கு.வ.து) நாள் 28-01-1994 வட்டி வீதம் அவ்வப்போது அரசு ஆணைப்படி கூட்டவோ குறைக்கவோ செய்யப்படும்)

94) சமணபகவான் மகாவீரர் சுவாமி அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் நிமித்தம் ஆட்டடி சாலைககள், கசாப்பு கடைகள், மீன் கடைகள் ஆகியவற்றை ஏப்ரல் மாதம் 3-ம் தேதியும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2-ம் தேதியும் திருவள்ளுவர் தினத்தன்று வடலூர் ராமலிங்கம் நினைவு நாளன்றும் மற்றும் அரசின் உத்தரவிடும் நாட்களில் மூடிவிட வேண்டும். இதற்கு எந்தவித நஷ்டஈடும் கோரக்கூடாது.

95) ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு பெற்ற 7 தினங்களுக்குள் ரூ.20/- மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் உரிமைதாரர் நகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன் எனவும் நகராட்சிக்கு எதிராக எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடருவதில்லை எனவும் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும்.

96) நகராட்சியால் புதிய கட்டுமான பராமரிப்பு பணிகள் உரிமம் காலத்தில் மேற்கொள்ளப்பட்டால் உரிமம் அனுபவிக்கும் காலத்திற்குரிய (மாதங்கள்) உரிம தொகை கணக்கீட்டு வசூலிக்கப்படும்.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

## <u>I. தினசரி சந்தைகள் மற்றும் வார சந்தைகள்</u>

1. தொழுநோய் முதலான தொற்று வியாதிக்காரர்கள் சந்தைகளில் வியாபாரம் செய்யவோ அல்லது நுழையவோ குத்தகைதாரர் அனுமதிக்க கூடாது.

   (அ) மார்த்தாண்டம் தினசரி சந்தைக்குள் உள்ள கட்டிடங்கள் தவிர வேறு எந்த காலியிடத்திலும் குத்தகைதாரர் நிரந்தரமாக கொட்டகை, ஏ.சி.சீட் போன்ற அமைப்புகளால் கடைகள் கட்டி கடைகள் நடத்த அனுமதிக்கக் கூடாது.

2. (அ) சந்தைகளுக்கு வரும் போது பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு உள்ளே மற்றும் வெளிவாயில்களை, யாரும் ஆக்கிரமிப்பு செய்யாமல் காலியாக வைத்திருக்க உதவி செய்ய வேண்டும்.

   (ஆ) சந்தைக்குள் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகையை குத்தகைதாரருக்கு செலுத்தத் தவறினால் மேற்படி இடத்திற்குரிய வாடகையை வசூல் செய்வதற்குண்டான நடவடிக்கையை குத்தகைதாரர் எடுக்கலாம்.

   (இ) உரிமையாணை பெற்றவர் கட்டணம் வசூல் செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டு அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கும்படி நகர் மன்றத்தை கோரினால் அதனால் ஏற்படும் செலவுகளையும் உரிமையாணை பெற்றவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை சுகாதார முறையில் பாதுகாக்க வேண்டும்.

4. சந்தைகளுக்கு உள்ளிருக்கும் காலியிடங்களில் மற்றும் இதர இடங்களில் பொருட்கள் விற்பனை செய்தால் அல்லது வேறு எந்த காரியங்களுக்கும் உபயோகப்படுத்தல் ஆகியவற்றை உரிமைதாரர் தவிர்க்க வேண்டும்.

5. (அ) ஆணையர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எந்த சாமானும் வைத்து விற்க கூடாது என்றும் அந்த இடம் காலியாக இருக்க வேண்டும் என்றும் தெரியப்படுத்தினால் உரிமதாரர் மேற்படி இடத்தில் எந்த வியாபார சாமான்களையும் வைக்காமல் மேற்படி இடத்தை காலியாக வைத்திருக்க வேண்டும். எந்தெந்த இடத்தில் என்ன வகையான வியாபாரம் செய்ய வேண்டும் என அறிவுறுத்த ஆணையருக்கு அதிகாரமுண்டு இந்த விஜயத்தில் ஆணையரின் தீர்ப்பே முடிவானது இது உரிமதாரரையும் கடைக்காரர்களையும் மற்றும் விற்பனைக்கு பொருட்கள் கொண்டு வருபவர்களையும் கட்டுப்படுத்தும்.

(ஆ) சந்தைக்குள் ஆணையர் எந்த பொருட்களை அனுமதிகளுக்கென தனியாக ஏற்பட்ட இடங்களிலாவது அல்லது குறிப்பிட்ட இடத்திலாவது விற்க நிர்ணயித்தால் உரிமை பெற்றவர் அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

6. தினசரி சந்தையில் நடைபாதையும் ரோட்டோரம் விற்பனை செய்ய உரிமதாரர் அனுமதிக்கக் கூடாது. அவ்விதம் வைத்திருக்கும் கடைகளை எவ்வித நோட்டீசும் கொடுக்காமலேயே கடையை வைத்திருப்பவர்கள் பொறுப்பில் அப்புறப்படுத்த ஆணையர் அவர்களுக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்றவருக்கு அதிகாரம் உண்டு. இது விஷயத்தில் உரிமைதாரர் அல்லது கடைக்காரர் எவ்வித நஷ்டஈடும் கோர முடியாது.

7. சந்தையில் ஒவ்வொரு நுழைவாயிலிலும் வசூல் செய்ய வேண்டிய கட்டணங்களை காட்டும் அறிவிப்பு பலகைகள் நகராட்சி செலவில் தயார் செய்யப்படும். அதில் குறிப்பிட்டுள்ள கட்டணங்களை மட்டும் தான் உரிமதாரர் வசூலிக்கப்பட வேண்டும்.

8. இரண்டு முறைக்கு மேல் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு அதிகமாக வசூல் செய்து அபராதம் விதிக்கப்பட்டால் உரிமத்தை ரத்து செய்ய நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு அப்படி ரத்து செய்து மறு ஏலம் விடுவதால் ஏற்படும் நஷ்டத்திற்கு உரிமதாரர் கட்டுப்பட்டவராவர் மறு ஏலம் விடப்படுவதால் ஏற்படும் இலாபத்திற்கு உரிமதாரருக்கும் எவ்வித பாத்தியதையும் இல்லை.

9. சந்தைக்குள் வண்டிகளை விடாமலும், ஆணையர் நிர்ணயிக்கும் பாதையில் மக்கள் நிற்கும் இடத்திலும் எவ்வித ஆக்கிரமிப்பும் பந்தல் முதலியவைகளும் போடாமல் உரிமதாரர் பார்த்து கொள்ள வேண்டும். என்னென்ன பாகத்தில் அல்லது இடத்தில் அல்லது செட்டில் அல்லது கடையில் என்னென்ன சாமான்கள் விற்பனைக்கு வைக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கவும் ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் பெற்ற நபருக்கு அதிகாரமுண்டு பொது மக்கள் வசதிக்கும் பாதுகாப்பிற்கும் சுகாதாரத்திற்கும் மற்ற காரணத்திற்கும் ஆணையர் தேவையான நிபந்தனைகள் விதிக்க அதிகாரமுண்டு அப்படிப்பட்ட உத்தரவுகள் எவ்வித ஆட்சபேனையுமின்றி கடைக்காரர் அல்லது உரிமைதாரரை கட்டுப்படுத்தும்.

10. சந்தையில் புதிதாக கடைகள் கட்டுவதற்கோ அல்லது தற்போதுள்ள கடை அல்லது கடைகளை நகராட்சி உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளவோ நகராட்சிக்கு உரிமை உண்டு. அவ்விதம் கடைகளின் மீது

அந்த ஆண்டுக்கு குத்தகைதாரர் எவ்விதமான பாத்தியதையும் கொண்டாடக்கூடாது நஷ்டஈடு கேட்க உரிமையில்லை.

11. கடைக்காரர் அல்லது உரிமைதாரர் எந்தவிதமான காரணத்தைக் கொண்டும் மண்ணெண்ணெய், கேஸ் முதலிய நெருப்பு பற்றக்கூடிய எவ்விதமான பொருட்களையும் விற்பனைகாகவோ அல்லது சேர்த்து வைக்கவோ கூடாது.

12. தேநீர், காப்பி முதலிய பானங்கள் தயார் செய்வதற்கு சந்தைக்குள் இருக்கும் கட்டிடங்களை பயன்படுத்தக்கூடாது.

13. கடைக்காரர் அல்லது உரிமைதாரர் எவ்வித நிரந்தரமான அல்லது தற்காலிகமான கட்டிடங்களையோ முக்கியமாக ஒலைப்பந்தல் மூங்கில், பாய் சாக்கு முதலியவைகளாலான வெப்பத்தட்டிகளை போட்டுக் கொள்ளக்கூடாது. மீறிப்போட்டால் அவைகளை எவ்வித அறிவிப்புமின்றி அப்புறப்படுத்தப்படும். அதனால் ஏற்படும் அனைத்து நஷ்டங்களுக்கும் அவரவரே பொறுப்பாவார்கள்.

14. கடைகளுக்குப்போகும் வழி எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் தாராளமாக இருக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் நடைபகுதிகளில் காய்கறி மற்றும் இதர விற்பனை பொருட்களை வைத்து வியாபாரம் செய்யக்கூடாது. அப்படி செய்தால் நாள் ஒன்றுக்கு ஆக்கிரமிப்பு செய்தவருக்கும், குத்தகைதாரருக்கும் ரூ.1000/-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்க ஆணையருக்கு அதிகாரமுண்டு அல்லது விற்பனை செய்த பொருட்களை பறிமுதல் செய்யப்படும். அதற்கு எந்தவித நஷ்டஈடும் கோர உரிமையில்லை.

15. (அ) கடைக்காரர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கடைக்குள் அல்லது இடத்திற்குள் தான் வியாபாரம் செய்ய வேண்டும். நடைபாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது.

(ஆ) கடைகளை வியாபரத்திற்காக மட்டும் தான் பயன்படுத்த வேண்டும்.

16. கடைகளுக்கு மத்தியில் இருக்கும் நடைப்பாதைகளில் வண்டிகள் செல்வதற்கு கடைகாரர் அல்லது உரிமைதாரர் அனுமதிக்கக் கூடாது.

17. கடைகளை எந்த வணிபத்திற்கு பயன்படுத்தப்படுவதைத் தவிர இதர உபயோகங்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

18. கடைகளை வைத்திருப்பவர்கள் அல்லது வேலையாட்கள் எவ்வித காரணத்தை கொண்டும் தினமும் இரவு 10 மணிக்கு மேல் காலை 5 மணி வரை கடையில் இருக்க அனுமதிக்கக் கூடாது.

19. கடைக்கருகில் பாத்திரங்களை கழுவியும், காய்கறிகளை அலம்பியும் இதர வகையிலும் அசுத்தம் செய்யவும் கூடாது.

20. பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தக் கூடாது. கழிவு பொருட்களை சந்தையில் உள்ள குப்பைத் தொட்டியில் போடப்பட வேண்டும். சாக்கடைகளிலும் நடைபாதைகளிலும் கடைக்கு முன்னாலும் போடக்கூடாது.

21. மேற்படி எந்த நிபந்தனைகளையும் மீறுபவர்கள் அவர்களின் உரிமம் அல்லது கடையை அனுபவிக்கும் உரிமையை ரத்து செய்து வெளியேற்ற ஆணையருக்கு அதிகாரமுண்டு அதற்கு எவ்வித நஷ்டஈடும் கோர உரிமையில்லை.

22. சந்தைகளில் கடை வைத்திருப்பவர்களுக்கு கடையை மாற்றி கொடுக்கக் கூடாது. வேறு நபர்களுக்கு மாற்றிக் கொடுத்தால் அது செல்லாது. அப்படி மாற்றி பெற்றிருப்பவரை கடையிலிருந்து காலி செய்து நகராட்சி பொறுப்பில் மேற்படி கடையை எடுத்துக் கொள்ள ஆணையருக்கு அதிகாரமுண்டு இதனால் எவ்வித நஷ்டஈடும் கோர உரிமையில்லை ஆணையரின் தீர்ப்பே இறுதியானது.

23. விற்பனை சாமான்களை கடைக்குள் மட்டும் வைத்து விற்கப்பட வேண்டும். கடையில் முன்பக்கத்திலோ அல்லது வேறு இடத்திலோ வைத்து விற்க அனுமதிக்கக் கூடாது.

24. ஆணையரின் எழுத்து மூலமான உத்திரவு பெறாமல் எவ்வித பெட்டி அல்லது பெட்டிக்கடைகள் சந்தைக்குள் வைக்கக் கூடாது. மீறி வைத்தால் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் அதை உடனே அப்புறப்படுத்தப்படும். அப்புறப்படுத்தினால் அவைகளை பறிமுதல் செய்ததாக கருதி பகிரங்க ஏலத்தில் விற்று அத்தொகையை நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த இழப்பிற்கு யாதொரு நஷ்டஈடும் கேட்க உரிமை இல்லை.

25. எதிர்பாராத காரணங்களால் சந்தைகள் மூடப்பட நேரிட்டால் குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் நகராட்சியில் எவ்வித நஷ்டஈடும கேட்க கூடாது அது அவர்களின் சொந்த பொறுப்பாகும்.

26. புயல், வெள்ளம், நெருப்பு ஆகியவற்றால் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு நகராட்சியிலிருந்து நஷ்டஈடு கேட்கக்கூடாது.

27. அரசியல் கட்சிகள் நடத்தும் பந்த் அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யும் பந்த் அல்லது எதிர்பாரதவிதங்களில் ஏற்படும் பஸ், லாறி மற்றும் ரயில் போக்குவரத்து ஆகியவைக்காக நடத்தப்படும் பந்த்களுக்காக நஷ்டஈடு கேட்கக்கூடாது.

28. ஆணையர் அவர்களின் எழுத்து மூலமான உத்திரவு இன்றி நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை இடிக்கவோ மாறுதல் செய்யவோ அல்லது இதர கட்டிட வேலை செய்யவோ கூடாது. அவ்வாறு செய்ததாக தெரியவந்தால் செலுத்தப்பட்ட டெப்பாசிட் தொகைகள் அனைத்தும் பறிமுதல் செய்வதுடன் மறு ஏலமும் விடப்படும் மறு ஏலத்தில் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டால் அது முழுவதும் உரிமைதாரரிடம் வசூல் செய்யப்படும்.

29. காய்கறி சந்தையில் முதல் நுழைவாயிலில் இருப்பக்கங்களில் உள்ள இரண்டு கடைகளில் வாடகை மற்றும் காய்கறி சந்தையில் கருங்கல் சாலையை நோக்கி கட்டப்பட்டுள்ள கடைகளில் வாடகை காய்கறி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமை அடங்காது.

30. ஓணம், கிறிஸ்மஸ், பொங்கல் பண்டிகைகளை ஒட்டி வரும் சந்தை தினங்களுக்கு முந்தைய தினத்திலும் இரவிலும் கட்டணங்களை வசூல் செய்து கொள்ளலாம்.

31. காய்கறி சந்தைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைக்க அனுமதி கிடையாது. அங்ஙனம் செய்தால் அபராதம் விதிக்க ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

32. காய்கறி சந்தை அபிவிருத்தததி பணிகள் செய்து தரப்பட்டுள்ள இடத்தில் அமைத்து கட்டணம் வசூல் செய்ய வேண்டும். இதில் ஏதேனும் நஷ்டம் உரிமைதாரருக்கு ஏற்படுமாயின் அதை கேட்கவோ முறையிடுவதற்கோ உரிமைதாரருக்கு உரிமையில்லை.

33. இந்த நிபந்தனைகள் அனைத்து ஏலத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கும் பொருந்தும்.

34. சாலையில் வலது பக்கம் இடது பக்கம் இரண்டடி தள்ளி தான் பொருட்களை விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும். அதேபோல் பின் வரிசையில் நடைபாதையில் 4 அடி விட்டு தான் பொருட்களை

வைக்க அனுமதிக்க வேண்டும். மேலும் தரையில் 20 சதுர அடிக்கு மேல் பொருட்களை வைத்து விற்பனை செய்ய அனுமதிக்க கூடாது.

35. கட்டணம் வசூல் செய்ய உரிமை பெற்றவர் தினசரி சந்தையில் சேரும் குப்பைகளை சொந்த பொறுப்பில் ஆட்களை நியமித்தும் வாகனங்களை ஏற்பாடு செய்தும் தினந்தோறும் அகற்றி கொள்ள வேண்டும். வாழைக்குலையிலிருந்து சுற்றி வரும் குப்பைகளை எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டியது குத்தகைதாரரின் கடமையாகும். குப்பைகளை அகற்ற காய்கறி சந்தைக்குள் வேலையாட்கள் என்ற முறையில் எந்த ஒரு யூனியன் அமைக்க குத்தகைதாரர் இடம் கொடுக்க கூடாது. மேலும் யூனியன் என்ற பெயரில் கட்டணம் வசூல்க்க குத்தகைதாரர் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது.

36. எக்காரணத்தைக் கொண்டும் உரிமம் அல்லது உரிமத் தொகையில் எந்த பாகத்தையும் தள்ளுபடி செய்யும்படி கேட்கவோ எந்த அறிக்கையில் வரையறுத்திருக்கும் கூடுதலாக வசூலித்து கொள்ள உரிமை அளிக்கும்படி கேட்கவோ உரிமைதாரருக்கு உரிமை இல்லை. மேலும் உரிமைதாரருக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்களை இலாகா மூலம் மராமத்து செய்வதில் தற்காலிகமாக தொழிலை நிறுத்தப்பட்டால் அதற்காக நஷ்டஈடு கேட்ட உரிமைதாருக்கு உரிமையில்லை.

37. உரிமைக்கு விடப்பட்டுள்ள நகராட்சி சொத்துக்களுக்கு உரிமை காலத்தின் இடையில் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. உரிமை காலத்தில் உரிமையாளர் இறந்து போய்விட்டால் அந்த உரிமத்தினை நகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். வாரிசுதாரர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய வாரிசு சான்றிதமுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

38. உரிமத்திற்கு விடப்பட்ட கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள எல்லா மின்சார சாதனங்களும் நகரசபையின் சொத்தாகவே இருக்கும். மேற்படி கட்டிடத்திற்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கான கன்ஸீமர் டேவணியை உரிமைதாரரே கட்டுவதுடன் மின்சாரம் உபயோகிப்பதினால் ஆகக்கூடிய செலவுகளையும் உரிமைதாரரே கட்டிவர கட்டுப்பட்டவராவார்.

39. ஆணையர் விரும்பினால் ஏலம் எடுத்தவர்கள் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் முத்திரை காகிதத்தில் பதிவு கட்டணம் உட்பட தமது சொந்த பொறுப்பில் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும். அதற்கான குறிப்பிட்ட தொகை முன்பணமாக நகராட்சி கஜனாவில் செலுத்த வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்
## II. காலிமனைகளும் கட்டிடங்களும்

1. உரிமைதாரர்கள் நிபந்தனைகளின்படி உரிமையாணை தொகை செலுத்த தவறினால் எக்ரிமென்ட் எழுதிக் கொடுக்க தவறினாலும் மற்றும் எவ்வித கட்டுப்பாடுகளை மீறினாலும் ஆணையர் உடனடியாக மன்றத்திற்கு அல்லது ஒப்பந்த குழுவிற்கு அறிக்கை செய்து மறு ஒப்பந்தப்புள்ளி அல்லது ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும் மறு ஒப்பந்தப்புள்ளி மறு ஏலம் விடுவதில் நஷ்டம் ஏற்பட்டால் உரிமைதாரர் பொறுப்பாவார் லாபம் அவருக்கு உரிமை இல்லை.

2. மேற்படி இடங்களிலோ அவை சேர்ந்தாற்போல் எந்த இடத்திலோ நகர் மன்றத்தின் அனுமதியில்லாமல் எவ்வித ஆக்கிரமிப்போ கட்டிடமோ செய்யக்கூடாது அப்படி மீறிச் செய்தால் அவரது உரிமை ரத்து செய்யப்படும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படலாம் கட்டிடத்தையும் ஆக்கிரமிப்பையும் அகற்றவும் அபராதமும் விதிக்கப்படும்.

3. அரசாங்க உத்தரவுப்படியோ, மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவுப்படியோ, இடங்களை நகர சபைக்கோ அரசுக்கோ தேவைப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும்.

4. உரிமம் ஸ்திரப்படுத்தி ஏழு தினங்களுக்குள் வைப்புத் தொகை நீங்கலாக ஏலத்தொகை முழுவதையும் செலுத்தி ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். தவறினாலும் உரிமம் ரத்து செய்ய உரிமைதாரர் பொறுப்பில் மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும். ரத்து செய்ய மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் விடுவதில் நஷ்டம் ஏற்பட்டால் உரிமைதாரர் பொறுப்பாவார் லாபம் ஏற்பட்டால் அவருக்கு உரிமையில்லை.

5. நகராட்சி ஆணையாளர் சொல்லும்படியும் பிளான்படியும் தான் கொட்டகை (கட்ட) கட்டிக்கொள்ள வேண்டும்.

6. கட்டிடத்தில் எவ்வித மாறுதலும் செய்வதற்கு குத்தகைதாரருக்கு உரிமை கிடையாது.

7. வாடகை நிர்ணயம் செய்யும் விசயத்திலோ அல்லது இதர சட்டப்பூர்வமான விசயங்களிலோ அவ்வப்போது பிறப்பிக்கப்படும அரசு உத்தரவுகளுக்கு ஏற்ப நகர்மன்றத்தால் இயற்றப்படும் தீர்மானங்களின்படி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும். இதனை வாடகைதாரர்

ஆட்சேபிக்கவோ, நீதி மன்றம் செல்லவே உரிமை இல்லை. மீறினால் கடையின் உரிமம் ரத்து செய்து ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமதாரரின் பொறுப்பில் ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

8. வேறு புதிய கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டால் அதைப்பற்றி ஆட்சேபிக்கவோ அதனால் நஷ்டம் ஏற்பட்டதாக சொல்லவோ நஷ்டஈடு கோரவோ உரிமைத்தாரருக்கு உரிமையில்லை. கடைகள் எந்த வியாபாரத்திற்கு உபயோகப்படுகிறதோ அதைத் தவிர இதர உபயோகங்களுக்காவது அல்லது குடியிருப்பிக்காவது அவைகளை உபயோகப்படுத்தக் கூடாது.

9. ஏல உரிமைதாரர் பெட்டிக்கடைக்கு மின்சார இணைப்பு செய்திருக்கும் வகையில் ரூ.1000/- டெப்பாசிட் நகராட்சி கஜனாவில் செலுத்த வேண்டும். மின்சார இலாகாவிற்கும் மின்கட்டணம் மாதம்தோறும் ஒழுங்காக செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

### III. மீன் மற்றும் ஆடடி சாலைக்கான சிறப்பு நிபந்தனைகள்

1. மாமிச கடைக்கும் விற்பனைக்காக கொண்டு வரும் மாமிசம் தலை, கால், ஈரல், குடல் இனங்களை தவிர தோல் உறுப்பு முதலியவைகளை கண்டிப்பாக கொண்டுவரக் கூடாது. எலும்புகளையும், இதர கழிவுகளையும் கண்ட இடங்களில் போடாமல் இதற்கெனவுள்ள குப்பைத் தொட்டியில் தான் போட வேண்டும். தலை, கால், குடல், ஈரல் முதலியவைகளை நடைபாதையில் திறந்த வைக்காமல் சல்லடை வலைக்குள் சுகாதார முறைப்படி வைத்திருக்க வேண்டும்.

2. ஆடடி சாலையில் உள்ள கடைகளை பயன்படுத்தும் கடைக்காரர்கள் அன்றாடம் மேற்படி கடையினை நீரினால் சுத்தப்படுத்துவதோடு, பினாயில் தெளித்து சுகாதாரமான முறையில் வைக்க வேண்டும்.

3. ஆடடி சாலையில் வதை செய்யப்படும் ஆடு, மாடு, கோழி போன்றவைகளை கால் நடை மருத்துவரால் பரிசோதித்து சீல் செய்த பின்பே வதை செய்யப்பட வேண்டும். அவ்வாறு பரிசோதிக்காத மிருகங்களோ அல்லது இறந்து போன மிருகங்களோ நகராட்சி அலுவலர்கள் ஆய்வில் தென்பட்டாலோ அதனை பறிமுதல் செய்து அழிப்பதோடு அன்னாரை மேறபடி கடையினை விட்டு உடனடியாக அப்புறப்படுத்த ஆணையருக்கு அதிகாரமுண்டு. இதை நடைமுறைப்படுத்தவும் செயல்பாடு குறித்து ஆணையருக்கு குத்தகைதாரர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

4. அரசாங்கம் ஆணையிடும் நாட்களிலும் தேசப்பிதா மகாத்மா காந்தி பிறந்த தினந்தன்றும், மகாவீரர்ஜெயந்தி அன்றும் மிருகங்கள் வதை செய்வது தடை செய்யப்படும்.

5. நகராட்சியால் எதிர்பாராத காரணங்களினாலோ அல்லது மின்தடையின் காரணங்களினாலோ நீர் வினியோகமோ அல்லது மின் இணைப்போ வழங்க இயலவில்லையெனில் அதற்கான மேற்படி கடையில் இருக்கும் வியாபாரிகள் கத்தகை தொகையினை செலுத்த மறுக்க கூடாது. அதற்காக எந்த இழப்பீடும் குத்தகைதாரருக்கு கோர உரிமையில்லை.

6. மீன் மற்றும் கருவாட்டு வியாபாரிகள் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் வியாபாரம் செய்ய வேண்டும். அதற்கு மாறாக நடை பாதையில் வியாபாரம் செய்தால் அதனை அப்புறப்படுத்தி அழிக்க நகராட்சிக்கு உரிமையுண்டு.

7. அழுகிபோன, கெட்டுப்போன மீன் மற்றும் கருவாடுகளை சந்தையில் வைக்கக்கூடாது. மேலும் கழிவு பொருட்களை அன்றாடம் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் மேற்படி சந்தையிலிருந்து தனது சொந்த பொறுப்பிலேயே அப்புறப்படுத்த வேண்டும்.

8. கெட்டுப்போன மீன் மற்றும் கருவாட்டு பொருட்களை மேற்படி சந்தையினுள் எந்த பகுதியிலும் சேமித்து வைக்க வியாபாரிகளுக்கு உரிமை கிடையாது. இதனால் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயம் நேரிடும் பொழுது சம்பந்தப்பட்ட வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

9. நாய்களை உள்ளே விடக்கூடாது.

## IV. கன்று காலி சந்தை

1. வாவுபலி பொருட்காட்சி திடலில் நடைபெறும் கன்று காலி சந்தையில் நகராட்சிக்கு ஏதாவது இடம் தேவைப்படுமாயின் உரிமைதாரரின் ஒப்புதல் இன்றி நகர்மன்றத்திற்கு எடுத்துக் கொள்ள அதிகாரமுண்டு. நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் தான் கன்றுகாலிச் சந்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

2. வாவுபலி பொருட்காட்சி நடைபெறும் காலத்தில் பொருட்காட்சிக்கு முன் 15 நாட்களும் பின் 15 நாட்களும் தவிர மற்ற காலங்களில் நடைபெறும் சந்தை நாட்களில் கட்டணம் வசூலிக்கலாம்.

3. சந்தை நாளான செவ்வாய் கிழமை மட்டும் கன்றுகாலி விற்பனை செய்யப்பட வேண்டும். திங்கள் கிழமை மாலை கன்றுகாலிகளை கொண்டு வரவும் புதன் கிழமை காலையில் கன்றுகாலிகளை அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

## V. மினி பார உந்து நிலையத்தின் கட்டணம் வசூலிக்கும் உரிமை

1) குறிப்பிட்டுள்ள விதிகளின்படி கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். உயர்ந்த விகிதத்தில் வசூலித்தால் உரிமை மறு ஏலத்தில் விடப்படும் மினிபார உந்து நிலையத்தில் வெளியில் கட்டணம் வசூல் செய்யக் கூடாது. கட்டணம் வசூலிப்பதற்கு மன்றத்தின் முத்திரை வைத்து அச்சிட்ட ரசீது பயன்படுத்தப்பட வேண்டும். மின்பார உந்து ஒன்றுக்கு நடுஇரவில் தொடங்கி நடுஇரவில் முடியுள்ள (24 மணி நேரத்திற்கு) கட்டணம் வசூலிக்க வேண்டும்.

2) மினிபார உந்து நிலையத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் குப்பைகளை தனது சொந்த செலவில் அப்புறப்படுத்த வேண்டும்.

3) குடிப்பதற்கும், சிறுநீர் கழிப்பிடத்தில் உபயோகத்திற்கும், உந்து வண்டி பார உந்து வண்டிகளில் ரேடியேற்றருக்குத் தேவையான தண்ணீர் உரிமையாணை பெற்றவர் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

4) மினிபார உந்து நிலையத்திற்குள் எவ்வித கட்டிடங்களும் கட்டவோ கட்ட அனுமதிக்கவோ கூடாது.

5) மினிபார உந்து நிலையத்தில் உள்ள பொது சொத்துக்களுக்கு கெடுதல் செய்பவர்களை தெளிவான விபரங்களுடன் நகர் மன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். தவறினால் நஷ்டத்திற்கு உரிமையாணை பெற்றவரே பொறுப்பாவார்.

6) காவல்துறை போக்குவரத்து துறையினர்களின் விதிகளுக்கும் கட்டணங்களுக்கும் கட்டுப்பட்டு உரிமையாணைப் பெற்றவர் நடந்து கொள்ள வேண்டும்.

## VI. வெட்டுவெந்நி காய்கறி சந்தை மற்றும் வாகனங்களுக்கான நிபந்தனைகள்

1) வெட்டுவெந்நியில் நகராட்சியால் கட்டப்பட்ட கடைகள், பொருட்க கையில் ஏந்தி விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்தல் மற்றும் வெட்டுவெந்நி சந்திப்பிலிருந்து சப்பாத்து சாலையில்

செல்லுகின்ற வாகனங்களுக்கும் (கோயில், குருசடி மற்றும் ஒர்க் ஷாப் செல்லும் வாகனங்களை தவிர) கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

2) மேற்படி கடை மற்றும் மீன் சந்தையில் சேருகின்ற அனைத்து கழிவுகளையும் குத்தகைதாரர் தனது சொந்த பொறுப்பிலேயே அப்புறப்படுத்தி கொள்ள வேண்டும்.

VII. கட்டண கழிப்பிடங்களுக்கான சிறப்பு நிபந்தனைகள்

1) காய்கறி சந்தை மற்றும் அனைத்து கட்டண கழிப்பறைகளுக்கு பொருத்தப்பட்ட மோட்டார் அதனை சார்ந்த பாகங்களுக்கு ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரே பராமரிப்பு செலவினை ஏற்க வேண்டும். அதுபோல் அதற்காக ஏற்படும் மின் கட்டண செலவையும் அவர் பொறுப்பிலேயே செலுத்தப்பட வேண்டும். பேருந்து நிலைய கழிப்பறையில் நடத்துநர் ஒட்டுநர் ஆகியோர்களிடம் கட்டணம் வசூலிக்க கூடாது.

2) கட்ட கழிப்பிடங்களை பொறுத்த வரை எந்த நிலையில் குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்டதோ அதே நிலையில் திரும்ப ஒப்படைக்க வேண்டும். மறு குத்தகைதாரருக்கு ஒப்படைக்க இயலாத மோசமான நிலையிருந்தால் அதனை பழுதுபார்க்க ஆகும் மதிப்பீட்டை தொகையினை சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடம் பிடித்தம் செய்யப்படும். மேற்படி மதிப்பீட்டுத் தொகையினை தேவைக்கேற்ப முடிவு செய்து நகராட்சி அந்த பணியினை மேற்கொள்ளும்.

3) பழைய குத்தகைதாரர் நிதி ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணத்தினை முழுவதும் செலுத்தி விட்டால் வைப்புத் தொகையினை திரும்ப வழங்கலாம். புதிய குத்தகைதாரர் மேற்படி மின் கட்டண வகைக்காக நிதி ஆண்டிற்கு முந்தைய பெப்ரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய மின் கட்டணத்தினை நகராட்சியில் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.

4) கழிப்பிடங்களை குத்தகைதாரர் தனது சொந்த செலவில் துப்புரவு செய்து கொள்ள வேண்டும். பினாயில், ஆக்சைடு போன்றவை போட்டு தினசரி துப்புரவு செய்ய வேண்டும். கழிப்பிட தொட்டியில் சேரும் கழிவுகளை குத்தகைத்தாரர் தனது சொந்த செலவில் எடுத்து அப்புறப்படுத்த வேண்டும்.

5) எதிர்பாராத விதத்தில் மின்சார மோட்டார் தண்ணீரோ நின்று விட்டால் யாதொரு இழப்பீடும் வழங்கப்பட மாட்டாது.

<u>மார்த்தாண்டம் காய்கறிச் சந்தையிலுள்ள ஆடு, மாடு, கோழி அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்ய வேண்டிய விபரம்</u>

| | ரூபாய் |
|---|---|
| ஆடு ஒன்றுக்கு | - 58.00 |
| மாடு ஒன்றுக்கு | - 41.00 |
| கோழி ஒன்றுக்கு | - 4.00 |

<u>குழித்துறை கன்று காலி சந்தையில் கட்டணம் வசூல் செய்ய வேண்டிய கட்டண விபரம்</u>

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. | காளை, பசு, எருது, போத்து இவைகள் ஒன்றுக்கு | - 18.00 |
| 2. | பன்றி ஒன்றுக்கு | - 6.00 |
| 3. | ஆடு ஒன்றுக்கு | - 18.00 |
| 4. | குதிரை ஒன்றுக்கு | - 12.00 |
| 5. | கழுதை ஒன்றுக்கு | - 6.00 |

<u>மார்த்தாண்டம் காய்கறிச் சந்தையில் இருக்கும் கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்க வேண்டிய விபரம்</u>

| | ரூபாய் |
|---|---|
| மலம் கழிக்க | - 3.00 |
| சிறுநீர் கழிவறை | - 2.00 |

<u>மார்த்தாண்டம் பேருந்து நிலையம் மற்றும் இதர இடங்களில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்க வேண்டிய விபரம்</u>

| | ரூபாய் |
|---|---|
| மலம் கழிக்க | - 3.00 |
| சிறுநீர் கழிவறை | - 2.00 |

<u>2021-2022 முதல் 2023-2024 முடிய உள்ள குழித்துறை மாலைச்சந்தை மற்றும் குழித்துறை அம்மன்கோவில் பக்கம் உள்ள சந்தையில் நாள் ஒன்றுக்கு வாடகை வசூல் செய்ய வேண்டிய விபரம்</u>

| வரிசை எண் | கடைகளின் விபரம் | வசூல் செய்யப்பட வேண்டிய கட்டணம் விபரம் கடை ஒன்றுக்கு ரூபாய் |
|---|---|---|
| 1 | இறச்சிக்கடை (ஆடு) | 87 |
| 2 | இறச்சிக்கடை (மாடு) | 87 |
| 3 | இறச்சிக்கடை (கோழி) | 58 |
| 4 | பானைக்கடை | 6 |
| 5 | வைக்கோல் கடை | 46 |
| 6 | மீன் கோடவுண் | 115 |
| 7 | காய்கறி கடை | 12 |
| 8 | வாழைக்குலை கடை | 18 |
| 9 | நாரங்காய்கடை | 12 |
| 10 | வெற்றிலை பாக்கு கடை | 12 |
| 11 | தக்காளி கடை | 12 |
| 12 | வாழை இலைக்கடை | 12 |
| 13 | புளிக்கடை | 18 |
| 14 | 20 சதுர அடி அதன்பாகத்திற்கு தரை வாடகை | 46 |
| 15 | கருவாடு வியாபாரம் செய்ய தட்டு ஒன்றுக்கு | 12 |
| 16 | மீன் வியாபாரம் செய்ய தட்டு ஒன்றுக்கு | 12 |
| 17 | மீன் வண்டி டெம்போ பாரத்துடன் | 288 |
| 18 | பார மாட்டு வண்டி ஒன்றுக்கு | 41 |
| 19 | வெற்று மாட்டு வண்டிக்கோ மற்றும் சக்கரமுள்ள வாகனங்கள் ஒன்று | 12 |
| 20 | பாரம் வைத்து வரும் சைக்கிள் ஒன்றுக்கு | 18 |
| 21 | வெற்று மூன்று சாக்கர வாகனம் | 23 |
| 22 | மூன்று சக்கரமுள்ள வாகனங்களுக்கு (பாரத்துடன்) | 46 |
| 23 | 5 கிலோவுக்கு மேல் 20 கிலோ வரை எடையுள்ள சுமை ஒன்றுக்கு | 10 |
| 24 | 20 கிலோவுக்கு மேல் 50 கிலோ வரை எடையுள்ள சுமை ஒன்றுக்கு | 12 |

| | | |
|---|---|---|
| 25 | 50 கிலோவுக்கு மேல் 100 கிலோ வரையிலும் எடையுள்ள சுமை ஒன்றுக்கு | 12 |
| 26 | கோழி கை சுமை, புல்கட்டு ஒன்றுக்கு நுழைவு கட்டணம் | 10 |
| 27 | கடா ஆடு, மாடு ஒன்றுக்கு நுழைவு கட்டணம் | 18 |
| 28 | நான்கு வீல் லோடு ஆட்டோ | 87 |
| 29 | நான்கு வீல் காலி ஆட்டோ | 35 |
| 30 | மூன்று வீல் ரோடு ஆட்டோ | 51 |
| 31 | மூன்று வீல் காலி ஆட்டோ | 18 |
| 32 | வாழை குலை ஒன்று | 6 |

VIII. குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி.திருமண மண்டபத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

1. கலையரங்க திருமண நிகழ்ச்சிக்கு - ரூ.13,000
2. கலையரங்க திருமண வரவேற்பு நிகழ்ச்சி மற்றும் இதர நிகழ்ச்சிக்கு - ரூ.10,000

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2036/2018/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3684**
**நிபந்தனைகள் அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.**13**

குழித்துறை நகராட்சியின் குடிநீர் நிதியின்கீழ் **21–05–2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| **1** | குழித்துறை நகராட்சி கழுவன்திட்டை OHT Tank அமைந்துள்ள வளாகத்தினுள் புதிதாக OHT Tank கட்டப்படவுள்ள இடத்தில் நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள 150mm DI Pipe மற்றும்100mm DI Pipe மாற்றியமைத்தல் மற்றும் Value pit புதிதாக கட்டுதல் | **7.50** | **1)** டி. ஜெஸ்டின்குமார்<br>**2)** எஸ். பாபு<br>**3)** ஜெயச்சந்திரன் | 15.96%<br>17.79%<br>21.38% |

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட 21.38% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : 3685
**அனுமதிக்கப்பட்டது**.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் 21–05–2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.4 பெருந்தெருவில் உள்ள மீன்சந்தை முதல் தபால் நிலையம் கிழக்கு வாசல் வரை மழைநீர் வடிகால் அமைத்து கவர் சிலாப் அமைக்கும் பணி செய்தல் | 8.55 | 1) பி. தேவதாஸ்<br>2) கே.ஜி. கிருஷ்ணதாஸ்<br>3) CRRA General Construction<br>4) பி. ஜெயசந்திரன்<br>5) ஆர். சுரேஷ் ராஜ்<br>6) டி. ஜெஸ்டின்குமார் | 14.55%<br>13.31%<br>20.56%<br>25.11%<br>32.59%<br>22.87% |

வரப்பெற்ற 6 ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் ஆர். சுரேஷ்ராஜ் என்பவரால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை 32.59% மதிப்பீட்டு தொகையினை விட குறைவாகவும் பொறியியல் விதிப்படி மதிப்பீடு தொகைக்கு 25%–க்கு அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத் தொகை (ரூ.8,55,000 x 32.59% ) ரூ.2,78,645/–ஐ அலுவலகததில் செலுத்திய பின்பு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : 3686
**அனுமதிக்கப்பட்டது**.

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் 21–05–2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றும் | 1.30 | 1) ஆர். அனி<br>2) பி. ஜெயபிரகாஷ் | 8.91%<br>29.29% |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணியாளர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு Vehicle Shead அமைத்தல் | | 3) சி. சுரேஷ்<br>4) ஜி. சுரேஷ்<br>5) ஆர். ஜெயசிங் | 11.52%<br>12.52%<br>15.71% |

வரப்பெற்ற 5 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி. ஜெயபிரகாஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டு தொகையினை விட குறைவாகவும், பொறியியல் விதிப்படி மதிப்பீடு தொகைக்கு 25%–க்கு அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத் தொகை (ரூ.1,30,000 x 29.29% ) ரூ.38,077/–ஐ அலுவலகததில் செலுத்திய பின்பு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : **3687**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் 21–05–2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் சந்தை பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தின் நுழைவு வாயிலில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சுற்று சுவர் உயர்த்தி கட்டுதல் | 1.90 | 1) CRRA General Construction<br>2) கே. பைஜீ<br>3) ஜி. சுரேஷ்<br>4) வி. வர்கீஸ்<br>5) ஆர். அனி | 13.88%<br>25.09%<br>11.85%<br>13.15%<br>7.56% |

வரப்பெற்ற 5 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே. பைஜீ என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி 25.09% தொகையானது மதிப்பீட்டு தொகையினை விட குறைவாகவும், பொறியியல் விதிப்படி மதிப்பீடு தொகையினை விட 25% க்கு அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத் தொகை (ரூ.1,90,000 x 25.09%) ரூ.47,671/–ஐ அலுவலகததில் செலுத்திய பின்பு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : **3688**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் .17</u>

குழித்துறை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் 21–05–2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வெட்டுவெந்நியில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு புதிதாக Septic Tank மற்றும் தண்ணீர் வசதி செய்தல் | 0.60 | 1) ஆர். அனி<br>2) எஸ். பாபு | 2.17%<br>0.04% |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினை விட 0.04% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். பாபு என்பவர் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : 3689
**அனுமதிக்கப்பட்டது**.

<u>பொருள் எண் .18</u>

குழித்துறை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் 21–05–2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை ஆர்.சி.தெருவில் அருகிலுள்ள வாம்பே கழிவறையில் பராமப்பு பணி மேற்கொள்ளுதல் | 4.30 | 1) ஜே. பிரிவீஷ்<br>2) ஆர். சுரேஷ் ராஜ்<br>3) எஸ். பாபு<br>4) ஆர். அனி<br>5) பி. ஜெயபிரகாஷ்<br>6) வி.எஸ். ஸ்ரீகுமார்<br>7) ஆர். ஜெயசிங்<br>8) வி. வர்கீஸ் | 16.11%<br>19.29%<br>29.19%<br>14.49%<br>13.55%<br>9.99%<br>9.67%<br>13.11% |

வரப்பெற்ற 8 ஒப்பந்தப்புள்ளிகளில் 29.19% மதிப்பீட்டை விட குறைவாகவும், 25% க்கு அதிகமாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ். பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டை விட 25% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்

தொகையாக (ரூ.4,30,000 x 29.19%) ரூ.1,25,517/–ஐ அலுவலகததில் செலுத்திய பின்பு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : 3690
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் .19

குழித்துறை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் 21–05–2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பெருந்தெரு பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 6.40 | 1) ஆர். சுரேஷ்ராஜ்<br>2) CRRA General Construction<br>3) எ. அனில்குமார்<br>4) எ. ஆன்றணி<br>5) ஆர்ர் அனி<br>6) ஆர். ஜெயசிங்<br>7) ற்றி. அமிர்தராஜ் | 24.94%<br>12.55%<br>25.52%<br>19.45%<br>13.42%<br>12.73%<br>12.89% |

வரப்பெற்ற 7 ஒப்பந்தப்புள்ளிகளில் 25.52% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எ. அனில்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டை விட குறைவாகவும் 25% க்கு அதிகமாகவும் இருப்பதால் கூடுதல் வைப்புத் தொகையான (ரூ.6,40,000 x 25.52%) ரூ.1,63,328/–ஐ அலுவலகததில் செலுத்திய பின்பு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.923/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்** : 3691
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் .20

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் Supply Installation and Commissioning of main MV Panel in Gnaran vilai head works-ல் மதிப்பீடு ரூ.24.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள 21–05–2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

1. Sree Ganga Electrical, Sripuram Tirunelveli
2. Kumar Agencies, Tirunelveli

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிக்கு கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டதில் Sree Ganga Electrical மட்டுமே தகுதி பெற்றுள்ளார். Kumar Agencies, Tirunelveli என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

ஆகவே Sree Ganga Electrical Tirunelveli அவர்களது Price Bid–ஐ **27–05–2021** அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் இடப்பட்டதில் மதிப்பீட்டை விட **5.14%** குறைவாக கொடுத்துள்ளது. மதிப்பீட்டை விட **5.14%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sree Ganga Electrical Tirunelveli என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>ஆ.கு.–</u> Sree Ganga Electrical, Sripuram Tirunelveli என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3692**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் .21</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் Supply, Installation and Commissioning of main HT Service Connection work in Gnaran vilai head works-ல் மதிப்பீடு ரூ.**24.40** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள **21–05–2021–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

1) Sree Ganga Electrical, Sripuram Tirunelveli
2) Kumar Agencies, Tirunelveli

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிக்கு கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டதில் Sree Ganga Electrical மட்டுமே தகுதி பெற்றுள்ளார். Kumar Agencies, Tirunelveli என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

ஆகவே Sree Ganga Electrical Tirunelveli அவர்களது Price Bid–ஐ **27–05–2021** அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் இடப்பட்டதில் மதிப்பீட்டை விட **5.15%** குறைவாக கொடுத்துள்ளது. மதிப்பீட்டை விட **5.15%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sree Ganga Electrical Tirunelveli என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>ஆ.கு.–</u> Sree Ganga Electrical, Sripuram Tirunelveli என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3693**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் .22</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75J 8227-க்கு **2020–2021–ம்** ஆண்டிற்கு தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய **21–05–2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விவரம் கீழ்வருமாறு.

1) Ganesh Motor works, Nagercoil - மதிப்பீட்டை விட **1.37%** குறைவு (**ரூ.61100/–**)

2) Madhava Motor works, Nagercoil - மதிப்பீட்டை விட **12.91%** கூடுதல் (**ரூ.69950/–**)

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **1.37%** குறைவாக கொடுத்துள்ள Ganesh Motor works, Nagercoil என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
<u>அ.கு.–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3694**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் .23</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75M 4923-க்கு பின்பக்க தொட்டியில் Plot பழுதடைந்துள்ளதை சரி செய்ய **21–05–2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விவரம் கீழ்வருமாறு.

1) Ganesh Motor works, Nagercoil - மதிப்பீட்டை விட **0.35%** கூடுதல் (**ரூ.28700/–**)
2) Akshya Motor works, Marthandam- மதிப்பீட்டை விட **0.17%** குறைவு (**ரூ.28850/–**)

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.17%** குறைவாக கொடுத்துள்ள Akshya Motor works, Marthandam என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
<u>அ.கு.–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3695**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.24</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மயானம் மற்றும் சுடுகாடு வார்டு எண்.4-ல் உள்ள பெருந்தெரு பகுதியில் அமைந்துள்ளது. தற்பொழுது கொரோனா பரவல் காலங்களில் உயிர் சேதம் அதிகம் ஏற்படுவதால் இந்த சுடுகாட்டின் பயன்பாடு அதிகரித்துள்ளது. எனவே இச்சுடுகாட்டினை பராமரிப்பு செய்யும் வகையிலும், பாதுகாப்பு கருதியும் இச்சுடுகாட்டைச் சுற்றிலும் மதில் சுவர் கட்டவும், ஏற்கெனவே போடப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக மோட்டார் இறக்கி தண்ணீர் வசதி செய்யவும், பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலையினை புதுப்பிக்கவும் ரூ.7.30 இலட்சத்தில் மதிப்பீடு தயார்

செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.5437/J2/2021-26, நாள் 10-06-2021-ன்படி பணியின் அவசியம் கருதி இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3696**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/- திருமதி.எஸ். பேரின்பம்
ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(பொ),
குழித்துறை நகராட்சி.